தமிழ்

# PC TIMES

April 2006

පීසී ටයිම්ස් பீசி டைம்ஸ்

ISSUE 02 Rs. 30/-

9 771391 502008

ஏப்ரல் - 2006

மலர் - 01 இதழ் - 02

## தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை



## உங்கள் கம்ப்யூட்டரை இளமையாக வைத்திருக்க

## மின்னஞ்சல் முகவரி பெறுவது எப்படி?


## MultiMedia

## இமைக்க மறந்த கண்கள்


## சிப்யூட்டர்


இலங்கையின் ஒரேயொரு மாதாந்த தமிழ் தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










# நவீன HONDA ROBOT

Honda நிறுவனம் தனது Asimo என்கின்ற Robot வின் மிகப்பிந்திய வடிவத்தை வெளியிட்டுள்ளது. இது, முன்னைய Asimo Robot க்களைப் போலவே குரலை அடையாளம் காணக்கூடிய திறனைக் கொண்டிருப்பதுடன், மாடிப் படிகளில் ஏறவும் கூடியது. ஆனாலும், இந்தப் புதிய Asimo சில குறிப்பிட்ட மனித அசைவுகளையும், முகபாவனைகளையும் அடையாளம் காணக்கூடியது. Robot தயாரிப்பில் இது ஒரு பெரிய பாய்ச்சலாகக் கருதப்படுகிறது. இந்த Asimo Robot ஐப் பார்த்து நீங்கள் கையசைத்தால் அதுவும் உடனே கையசைக்கும். இதனுடைய Bubble Head நீங்கள் நடந்து செல்லும்போது உங்களைப் பின்தொடர்ந்து வரக்கூடியது என்பதுடன், நீங்கள் நடந்து வரும்போது, உங்கள் பாதையை மறிக்காமல் விலகி நிற்கவும் கூடிய உணர்திறனைக் கொண்டது. Honda நிறுவனம் தனது கார் விற்பனை நிலையத்தில் இந்த புதிய Asimo வை ஒரு விற்பனைப் பிரதிநிதியாக நிறுத்தி வாடிக்கையாளர்களை வியக்க வைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் PC TIMES
தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

**Editor**
K.Rushangan
pctimes@wijeya.lk

**Layout & Graphic Design**
R.Ranjan Jeffry

**Editorial Coordinator**
R.R.Jeyakeshan

**Assistant Publishing Manager**
Sunanda Karunaratna

**Production Manager**
Ashley Cooray

**Circulation Manager**
Rohan Fonseka

**Information Systems Manager**
Naveen Gunaratne

**Desktop Publishing Manager**
Chandana Dasanayake

**Advertising Sales Manager**
Saaranga Wijeratne

**Subscription Executive/Sales**
Ranjith Rupasinghe
Tel: +94 77 3502183

**Brand Manager**
Sujith Pathirannehe

wijeyanewspapers
helping shape opinions

**Publisher**
WIJEYA NEWSPAPERS LTD
No.08, Hunupitiya Cross Road,
Colombo-02,
Sri Lanka
Tel: +94 11 2314714
email: pctimes@wijeya.lk


## "கனவு மெய்ப்பட வேண்டும்... கைவசமாவது விரைவில் வேண்டும்..."

**வணக்கம்,**

PC TIMES முதல் இதழுக்கு வாசகர்கள் தந்த ஆதரவு மகிழ்ச்சி தருகிறது. வந்து குவிந்த கடிதங்கள், மின்னஞ்சல்கள், நேரிலும், தொலைபேசி மூலமாகவும் வாசகர்கள் தெரிவித்த கருத்துக்கள் எல்லாமே உற்சாகம் தருகின்றன.

இலங்கையில் சஞ்சிகை முயற்சிகள் எல்லாமே ஒரு தொடர்ச்சியின்றி இடைநடுவில் நின்றுபோனமைக்கு வாசகர்களது ஆதரவு இல்லாததுதான் காரணம் என்று சொல்லப்படுவது தவறு என்பதை PC TIMES க்கு வழங்கிய ஆதரவின்மூலம் வாசகர்கள் நிரூபித்திருக்கிறார்கள். வாசகர்களுடைய எதிர்பார்ப்பை நாடிபிடித்து, அவர்களைக் கவரக்கூடிய விடயங்களுடன், ஒரு சஞ்சிகை சரியான முறையில் சந்தைப்படுத்தப்படுமானால் அதன் வெற்றியில் எந்தச் சந்தேகமும் கிடையாது.

வாசகர்கள் தரும் இந்த ஆதரவுப் பலத்துடன், நாம் கடந்த இதழிலேயே கூறியிருந்தபடி, PC TIMES ஒரு அறிவியல் பொழுதுபோக்கு சஞ்சிகையாகத் தனது பயணத்தைத் தொடரும்.

இது Open Source யுகம். அறிவு தனி மனிதனின் ஆதிக்கத்துக்குள் சிக்குப்படாமல், சுதந்திரமாக அனைவருக்கும் பகிரப்படவேண்டும் என்ற சிந்தனை வலுப்பெற்றுள்ள காலம். இந்தியாவின் Panacea நிறுவனத்தின் இயக்குநர் துரைப்பாண்டி சொல்லியிருப்பதுபோல், "அறிவுசார் சொத்துரிமை(Intelectual Property) என்பது அபத்தம்".

**"நம் பாட்டன், பூட்டன் தந்த அறிவின் அடிப்படையில், நம் முன்னோர் சேமித்து வைத்துச்சென்ற அறிவின் மீது நின்றே நாம் இயங்குகின்றோம். அப்படி இருக்கும்போது, ஏதோ சூனியத்தில் இருந்து ஒன்றைக் கண்டுபிடித்தவர்கள் போல அறிவுசார் சொத்துரிமை என்று சொல்லி சமுதா யத்தைக் கொள்ளையடிப்பதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?"**

என்று அவர் எழுப்பும் கேள்வி, தகவல் தொழில்நுட்பத் துறைக்கு மாத்திரமன்றி, அறிவுசார் துறைகள் அத்தனைக்கும் பொருந்துகிறது.

அறிவை, அதிகாரத்தின்-ஆதிக்கத்தின் கருவியாகப் பயன்படுத்தும் முயற்சிகளுக்கு, இணையத்தள உலகில் அறிமுகமாகியிருக்கும் இலவச Blog தளங்களும் ஆப்பு வைக்கத் தொடங்கியுள்ளன.

நவீன யுகத்தின் இந்த Open Source சிந்தனையும், Blog தளங்களும் அறிவியல் யுகத்தின் புரட்சிகள் என்றே வர்ணிக்கப்படவேண்டும்.

இந்தச் சிந்தனையின் வழி, நாமும் அறிவைப் பகிர்ந்து, நம்மையும், மற்றையவர்களையும் வளப்படுத்துவோமாக.

**-ஆசிரியர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகள். . . . . . . . . . . . . . . 3

நவீன தொலைத்தொடர்பு
தொழில்நுட்பம் CDMA . . 4

போக்குவரத்து விதிகளை
மீறுவோருக்கு எமனாகிவரும்
சிம்பியூட்டர்கள் . . . . . . . . . . . . 6



உங்கள் கம்ப்யூட்டரை இளமையாக
வைத்திருக்க சில ஐடியாக்கள் . . . 8

கணினிகளை குறிவைத்து புதிய
படையெடுப்பு! . . . . . . . . . . . . 11

வச்சேன் பார்
ஆப்பு "Blog" . . . . . . . . . . . . 12

ஜாவாவைப் பற்றிச் சுழலும் உலகு . . 14

புதுவரவு:





Sony Ericsson இன்
அடுத்த படைப்பு . . . . . . . . . 16

பாட்டுக் கேட்பது முதல் பல்லுப்
பிடுங்குவது வரை. . . . . 18

இமைக்க மறந்த கண்கள் . . . . . . 20

ஓரே பார்வையில்
பல மின்னஞ்சல்கள். . . . . . . . . . 21

மெல்லத் தமிழ் இனி. . . . . . . . . . 22



Ctrl + Alt + Delete ஐக்
கண்டுபிடித்தவர் . . . . . . . . . . 24

Help Desk . . . . . . . . . . . . 25

Keyboard குறுக்கு வழிகள் . . . . . 26

Bluetooth Technology . . . . . . 27

மின்னஞ்சல் முகவரியொன்றைப்
பெற்றுக்கொள்வது எவ்வாறு?. . . . 28

கம்ப்யூட்டர் கடி (ஜோக்கு) கள். . . . 30

வாசகர் திருமுகம் . . . . . . . . . 31




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயதுவந்தவர்களுக்கான பட வெளியீட்டில் Googleற்கு தடை

அமெரிக்க நீதிமன்றத்தின் தடையுத்தரவின் காரணமாக Google இணையத் தேடல் நிறுவனம் வயது வந்தவர்களுக்கான படங்களைத் தேடுவதை மாற்றியமைக்கவேண்டி ஏற்பட்டுள்ளது. Perfect 10 எனப்படும் வயது வந்தவர்களுக்கான சஞ்சிகையின் படங்களை google தனது இணையத்தளத்தில் வெளியிட்டமை தொடர்பாக, P10நிறுவனம் தாக்கல் செய்த வழக்குக் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

Perfect 10 சஞ்சிகை 7.99டொலருக்கு விற்பனை செய்யப்படுவதுடன், சஞ்சிகையுடன் தொடர்புடைய இணையத்தளத்தைப் பயன்படுத்துவதற்கு மாதாந்தம் 25.50டொலரும் அறவிடப்படுகிறது. Google ஆல் காண்பிக்கப்படும் இந்தச் சிறிய படங்கள், P10 சஞ்சிகையின் பதிப்புரிமைக்கு பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதாக அமெரிக்க நீதிபதியான A.Haward Matz தனது தீர்ப்பில் கூறினார். குறிப்பிட்ட படங்களை வெளியிடுவதற்கு google நிறுவனத்துக்கு நீதிபதி இடைக்காலத் தடையுத்தரவும் பிறப்பித்தார்.

எனினும், இவ்வாறான இடைக்காலத் தடையுத்தரவுகள் P10 உடன் தொடர்புடைய படங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்று தெரிவித்துள்ள Google நிறுவனம், பொதுவாக தமது தளத்தில் படங்களைத் தேடுவதை இது எந்தவிதத்திலும் பாதிக்காது என்றும் கூறியுள்ளது.

# Vista: Microsoft நிறுவனத்தின் புதிய Operating System

உலகின் மிகப்பெரிய மென்பொருள் தயாரிப்பாளரான Microsoft நிறுவனம் தனது அடுத்த Operating System மான Windows Vista வை வர்த்தக நிறுவனங்களுக்கு வழங்கவுள்ளது. இந்தப் புதிய பதிப்பினை 500,000 வாடிக்கையாளர்களுக்கு வழங்கிப் பரீட்சிக்க இருப்பதாக அந்த நிறுவனம் கூறுகிறது.

முன்னதாக Longhorn எனும் இரகசிய குறியீட்டுப் பெயரால் அறியப்பட்ட இந்த மென்பொருள், Windows XP அறிமுகப்படுத்தப்பட்டு அரை தசாப்தம் கடந்துள்ள நிலை யில், 2007 இல் வெளியி டப்படவுள்ளது. இந்தப் புதிய Opera- ting System ஆனது Internet Explorer 7 எனப்படும் பாதுகாப்பான இணைய உலாவி மென்பொருளையும் (Web Browsing Software) உள்ளடக்கியிருக்கும். பாவனையாளர்கள் எந்த வித VPN( Virtual Private Network) தொடர்புகளும் இல்லாமல் தமது அலுவலகத்திலிருக்கும் ஏனைய கணினிகளுடன் தொடர்பிலிருப்பதற்கும் Vista அனுமதிக்கும்.

கணினிகளை வைரசிலிருந்து பாதுகாக்கக்கூடியதாக, Patches எனப்படும் இலகுவாக மென்பொருள்களை Install செய்யும் வசதியையும் உள்ளடக்கியதாக அமையவுள்ள இந்தப் புதிய Operating System இல், User Account Control இல் செய்யப்படும் மாற்றம் காரணமாக, அலுவலகத்துக்குள் இணைக்கப்பட்டிருக்கும் கணினிகளுக்கிடையே வைரஸ் பரவுவது கடினமாக்கப்பட்டிருப்பதாகவும் அந்த நிறுவனம் கூறுகிறது.

# iTunes விற்பனை ஒரு பில்லியனைத் தாண்டியது

Apple நிறுவனத்தின் Online music சேவையில் வெளியிடப்படும் iTunes இன் ஒரு பில்லியனாவது பிரதியை கொள்வனவு செய்த அமெரிக்காவைச் சேர்ந்த 16வயது இளைஞரான அலெக்ஸ் ஒஸ்ட்ரொவ்ஸ்கி, Coldplay's Speed of Sound என்ற அந்த ஒரு டொலருக்கும் குறைவான விலையுள்ள பிரதியைக் கொள்வனவு செய்ததன்மூலம், 10 music players உட்பட பல பரிசில்களை வென்றுள்ளார். அந்த இளைஞனின் பெயரில் இசை புலமைப்பரிசிலொன்றை வழங்கவும் தீர்மானத்திருப்பதாக Apple நிறுவனம் தெரிவித்தது.

சுமார் 3வருடங்களுக்கு முன்னர் Apple நிறுவனம் ஆரம்பித்த Online Music சேவை, அமெரிக்காவில் பிரபல்யமாக விற்பனை செய்யப்பட்டும் வருகிறது. ஒரு பில்லியன் iTunes ஐ இணையத்தளத்திலிருந்து கொள்வனவு செய்துகொண்டிருப்பதன் மூலம், சட்டவிரோதமாக இசைத்தட்டுக்களைக் கொள்வனவு செய்ய விரும்பவில்லை என்பதை மக்கள் எடுத்துக்காட்டியிருப்பதாகவும், இசைத்தட்டு விற்பனையைவிட இணையத்தளத்தின் மூலமான இசை விற்பனை அதிகரித்திருப்பதாகவும் Apple நிறுவனத்தின் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி ஸ்ரீவ் ஜொப்ஸ் கூறினார்.

- தொகுப்பு: மகேஸ்வரன் பிரசாத் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CDMA

## (Code Division Multiple Access)

## நவீன தொலைத்தொடர்பு தொழில் நுட்பம்

தகவல் உதவி:


இது 30 ஆண்டுகளுக்கு முன்னர் இராணுவ தேவைகளுக்காக உருவாக்கப்பட்ட ஒரு கம்பியில்லா தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் (Wireless Technology) ஆகும். ஒன்றுக்கு மேற்பட்ட அலைவரிசைகளை (Frequency) ஒரே தடவையில் பாவிக்ககூடியதாக இருப்பதே இதன் சிறப்பம்சமாகும்.

முன்னொருபோதுமில்லாத வகையில், தற்போது மிக அதிகமானவர்கள் கம்பியில்லா தொலைத்தொடர்பு தொழில்நுட்ப வளர்ச்சியைப் பெரிதும் எதிர்பார்க்கின்றனர். காரணம், மூன்றாம் சந்ததிக்குரிய {Third-Generation (3G)} மின்னஞ்சல் (email) இணையம் (web) digital படங்கள் எடுத்தல் மற்றும் அனுப்புதல், தொலைக்காட்சி ஒலி ஒளிபரப்பு என்பவற்றில் கம்பியில்லா தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் மிகப்பெரும் பங்காற்றுவதாகும்.

GSM (Global System for Mobile Communication) வலையமைப்புடன் ஒப்பிடும்போது CDMA வலையமைப்பு தடங்கல்களற்ற, தெளிவான, துல்லியமான தகவல் பரிமாற்றத்தைத் தருவதுடன், ஒன்றுக்கு மேற்பட்ட அலைவரிசைகளை ஒரே தடவையில் பாவிக்ககூடிய, பெரிய பரந்த வலைப் பின்னலை இது கொண்டிருக்கிறது.


CDMA தொலைபேசி கருவியானது (Handset) GSM தொலைபேசி கருவியைவிட மிகக் குறைந்த அளவு

**CDMA Users are Separated by Codes**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மின்சாரத்தையே பயன்படுத்துவதால் பச்சை தொலைபேசிக் கருவி (Green Handset) என இது அழைக்கப்படுகிறது. சாதாரண GSM மற்றும் அனைத்து தொலைபேசிகளும் 600 மில்லிவாற் (Milliwatt) மின்சாரத்தை பாவிக்கும் அதே நேரம் CDMA 200 மில்லிவாற் (Milliwatt) மின்சாரத்தையே பயன்படுத்துகிறது. இதனால் தொலைபேசியை பயன்படுத்தக்கூடிய நேரம் அதிகரிப்பதுடன், உடலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய கதிரியக்க அச்சுறுத்தலையும் தவிர்த்துக்கொள்ளலாம். மின்கல (Battery) பாவனைக் காலமும் அதிகரிக்கிறது. சுற்றாடலுக்கு தீங்குவிளைவிக்கும் வீதம் மிக மிகக் குறைவு என்பதாலேயே இது பச்சை தொலைபேசிக் கருவி (Green Handset) என அழைக்கப்படுகிறது.

அதுமட்டுமின்றி, மற்றவர்களால் ஒட்டுக்கேட்க முடியாத அளவுக்கு இது பாதுகாப்பானதும்கூட. காரணம், ஏதாவது ஒரு தொலைபேசியை ஒட்டுகேட்பதானால் அத்தொலைபேசிக்குரிய அலைவரிசை எண் (Frequency Code) தெரிந்திருக்க வேண்டும். சாதாரண தொலைபேசிகளில் அலைவரிசை எண் (Frequency Code) குறிப்பிட்ட ஒரு எண்ணாக இருப்பதால் இது இலகுவாக கண்டுபிடிக்கப்படுகிறது. ஆனால், CDMA இல் ஒவ்வொரு முறை தொலைபேசியைப் பாவிக்கும்போதும் எழுந்தமானமாக (Randomly) அலைவரிசை எண் (Frequency Code) மாறுபடுவதால் அலைவரிசை எண்ணை (Frequency Code) கண்டுபிடித்து ஒட்டுகேட்பது முடியாத காரியமாகி விடுகிறது.

CDMA வலையமைப்பானது, 2.5G, 3G வலையமைப்பால் உருவாக்கப்பட்டுள்ளதால், அதிக கொள்ளளவுள்ள, ஸ்திரமான, மிக வேகமான தகவல் பரிமாற்றத்தை வழங்குவதுடன், மிகக் குறுகிய நேரத்தில் இணையங்களுக்குள் நுழையவும் முடிகிறது, படங்களை, பாடல்களை மற்றும் விளையாட்டுகளை இலகுவாக இணையங்களுக்கூடாக இறக்கிக்கொள்ள முடிகிறது (Download).

CDMA தகவல் தொழில்நுட்பத்தில் ஒரு மைல் கல் தான். ஆனால், இதிலிருக்கக்கூடிய குறைபாடுகளையும் நீக்கிக்கொண்டு நாளை இன்னோர் முன்னேற்றமடைந்த தொழில்நுட்பம் இதைப் பின்தள்ளக் கூடும். பொறுத்திருந்து பார்ப்போமா?.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# போக்குவரத்து விதிகளை மீறுவோருக்கு எமனாகிவரும் சிம்ப்யூட்டர்கள்

ஆக்கம்:- சந்திமா திசாநாயக்க.
தமிழில்:- இ.ரஞ்சன் ஜெப்(f)ரி.

இந்தியாவைச் சேர்ந்த பாடசாலை மாணவனாகிய விவேக் மோட்டார் வண்டியிலேயே பாடசாலைக்குப் பயணம் செய்யும் வழக்கம் கொண்டவன். வாகன நெரிசல் நிறைந்த நெடுஞ்சாலையில் வாகனங்களுக்கு மத்தியில் இருக்கும் சிறிய இடைவெளியினூடாகப் புகுந்துகொண்டு பயணிப்பதென்றால் விவேக்கிற்கு கொள்ளைப் பிரியம்.

ஆனால், அண்மைக்காலமாக முகத்தைச் சுழித்துக்கொண்டவண்ணமே விவேக் மோட்டார் சைக்கிளில் அவனுடைய பயணத்தை மேற்கொள்கிறான்.






அவனது இந்த அதிருப்திக்குக் காரணம் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள பரீட்சை குறித்த யோசனையன்றி, போக்குவரத்துப் பொலிசாரால் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் சிறிய ரக உபகரணமொன்றேயாகும்.

இந்தியாவின் பெங்களூர் பொலிசாரால் உபயோகப்படுத்தப்படும் இந்தச் சிறிய ரக உபகரணம் சிம்பியூட்டர் என அழைக்கப்படுகிறது. இது இந்தியாவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த சிம்பியூட்டர் பொதுமக்களின் கணினி என்றும் வர்ணிக்கப்படுகிறது. சாதாரண பொதுமகன் ஒருவனால் தாங்கிக் கொள்ளக்கூடிய விலையில் இந்தக் கணினியைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதுவும், இலகுவாகக் கையாளக்கூடியதாக இருப்பதுவும் இந்தக் கணினியின் பெயர் இவ்வாறு அமைவதற்குக் காரணமாக அமைந்துள்ளது. அத்துடன், இந்தக் கணினிக்கு 'சிம்பிள் கொம்பியூட்டர்" எனும் ஆங்கிலச் சொற்களின் முதல் எழுத்துக்களைப் பொருத்தியே சிம்பியூட்டர் எனும் பெயர் உருவாக்கப்பட்டுள்ளது. இது குறைந்த விலையைக் கொண்ட பல மொழிகளில் கையாளக்கூடிய சிறிய ரகக் கணினியாகும்.

வீதிப் போக்குவரத்து விதிகளை



மீறும் நபர்களுக்கு எதிரான தண்டப் பணத்தை அறவிடும் செயற்பாடுகளை பெங்களூர் பொலிசார் தற்போது இந்தக் கணினியின் உதவியுடனேயே மேற்கொண்டு வருகின்றனர். உடனுக்குடன் போக்குவரத்து விதிகளை மீறுவோருக்கு எதிராக மட்டுமன்றி, கடந்த காலத்தில் போக்குவரத்து விதிகளை மீறியவர்களுக்கும் இந்தச் சிறிய ரகக் கணினியின் உதவியுடன் பொலிசார் தண்டம் விதிக்கின்றனர்.

இதுவரையில் பெங்களூரில் உள்ள 30 பொலிசாருக்கு இந்தக் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறான மேலும் 30 கணினிகளை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தச் சிம்பியூட்டர்களை உபயோகிப்பது தொடர்பாக, பெங்களூரைச் சேர்ந்த 150 பொலிசாருக்கு இதுவரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

இணையத்தள வசதியையும் கொண்ட, புத்தகத்தின் பக்கமொன்றின் அளவிருக்கக்கூடிய இந்த சிம்பியூட்டரில் இருக்கும் பொத்தான்களில் சிலவற்றை அழுத்துவதன் மூலம், சாரதி ஒருவர் ஏற்கனவே மேற்கொண்ட போக்குவரத்து விதிகளை மீறியமை தொடர்பான தரவுகளையும் பெற்றுக்கொள்ளமுடியும். அவ்வாறான


அஜேகுமார் சிங்

தரவுகளை பொலிசார் பதிவுசெய்து கொள்வதற்குரிய வசதிகளும் சிம்பியூட்டரில் காணப்படுகிறது.

விவேக் உட்பட 2 இலட்சத்துக்கும் அதிகமான போக்குவரத்து விதிகளை மீறுபவர்கள் தற்போது பீதியடைந்துள்ளமைக்குக் காரணமாகவும் இந்தச் சிறிய ரகக் கணினி அமைந்துள்ளது.

“இந்தச் சிம்பியூட்டரை உபயோகித்த முதலாவது நாளிலேயே நாம் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமான தொகையை தண்டப்பணமாக அறிவிட்டிருந்தோம். இவற்றில் அனேகமானவை சில தினங்களுக்கு முன்னர் வீதிப் போக்குவரத்து விதிகளை மீறிய சம்பவங்களுடன் தொடர்புபட்டவை” என்கிறார் ஒரு பொலிஸ் அதிகாரி.

பெங்களூர் பொலிஸ் பொறுப்பதிகாரி அஜேகுமார் சிங், சிம்பியூட்டரின் முக்கியத்துவம் பற்றி அடிக்கடி கருத்துக்களை வெளியிடும் ஒருவர். இவர் அண்மையில் பீ. பீ. சி செய்திச் சேவைக்குப் பின்வருமாறு கருத்து வெளியிட்டிருந்தார்.


“ஒரு சந்தர்ப்பத்தில் வான் சாரதி ஒருவர் எம்மிடம் அகப்பட்டார். ஏற்கனவே 10 தடவைகள் அந்தச் சாரதி போக்குவரத்து விதிகளை மீறியமை தொடர்பான தரவுகளை சிம்பியூட்டரின் உதவியுடன் நாம் பெற்றுக்கொண்டோம். இதனால் கடந்த 10 தடவைகளும் இவர் மேற்கொண்ட குற்றத்துக்காகவும் அவருக்கு தண்டப்பணம் விதிக்க எம்மால் முடிந்தது”.

கடந்த காலத்தில் சாரதிகள் மேற்கொண்ட போக்குவரத்து விதிகளை மீறியமை தொடர்பான குற்றச்செயல்களை மட்டுமன்றி, அவற்றுக்கான தண்டப்பணத்தினையும் இந்தச் சிம்பியூட்டர்கள் சரியாகக் கணித்துக் கூறுகின்றன.

“சிம்பியூட்டர்கள் எங்களுக்கு பெரும் நிம்மதியை ஏற்படுத்தியுள்ளன. போக்குவரத்துச் சட்டங்களின் சரத்துக்களுக்கு அமைய குற்றவாளியொருவருக்கு எவ்வளவு தண்டப்பணம் அறவிடப்படவேண்டும் என்பதை சிம்பியூட்டர் கணித்துக் கூறுகிறது. இதனால் குற்றவாளியின் குற்றச்செயல் மற்றும் அவர் செலுத்தவேண்டிய தண்டப்பணத்தினை எந்தவொரு வாதப்பிரதிவாதமும் இன்றி எம்மால் அறவிட முடிகிறது” என்கிறார் அவர்.

“முன்னர் சாரதியொருவரின் கடந்தகால குற்றச்செயல்களைக் கண்டுபிடிப்பதாயின் அதற்கு நீண்ட நேரம் தேவைப்பட்டது. பிராந்தியப் போக்குவரத்துக் காரியாலயங்களில் குவித்து வைக்கப்பட்டிருக்கும் தூசு படிந்த பழைய கோவைகளை(Files)ப் புரட்டுவதன் மூலமே சாரதி ஒருவருடைய கடந்த கால போக்குவரத்துக் குற்றச்செயல்களை எம்மால் கண்டுபிடிக்க முடிந்தது. தற்போது சிம்பியூட்டர்கள் இருப்பதனால் இந்தப் பிரச்சினைகளில் இருந்து நாம் சற்று விடுபட்டிருக்கிறோம். ஆனால் எமது நகரத்துக்கு மேலதிக சிம்ப்யூட்டர்கள் தேவையாக உள்ளது”.

இவ்வாறு, வாகன நெரிசல் மிக்க சுற்றுவட்டமொன்றில் கடமையாற்றிக் கொண்டிருந்த பொலிஸ் பரிசோதகர் லோகேஸ் குமார் சிம்பியூட்டரை



நோக்கியவாறே பீ. பீ. சி செய்திச் சேவைக்கு கூறினார்.

சிம்பியூட்டரைத் தயாரிக்கும் என்கோ சொப்ட்வெயார் நிறுவனத்தின் தலைவர் தேஸ்பாண்டே சிம்பியூட்டர் தொடர்பாக பொலிஸ் அதிகாரிகள் தம்முடன் பகிர்ந்துகொண்ட விடையங்களை நினைவூட்டினார்.

“அந்தப் பொலிஸ் அதிகாரிகள் எனக்கு நன்றி சொன்னார்கள். தங்களுடைய கடமை இந்த அளவுக்கு இலகுவாக்கப்பட்டமையை தம்மால் நம்பவே முடியாதிருப்பதாகவும் அந்த அதிகாரிகள் என்னிடம் குறிப்பிட்டார்கள்”.








போக்குவரத்துப் பொலிசாரின் வாழ்க்கை சிம்பியூட்டர்களினால் இலகுவாக்கப்பட்டுள்ளதுடன், விவேக் போன்ற போக்குவரத்து விதிகளை கருத்திற்கொள்ளாத சாரதிகளின் அச்சம் மேலும் அதிகரித்துள்ளது.

ஏற்கனவே போக்குவரத்து விதிகளை மீறியமை தொடர்பான குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சாரதிகள், தங்களுக்குரிய தண்டப்பணத்தைச் செலுத்துவதிலும் பார்க்க அவர்களுடைய வாகனங்களை விற்றுவிடுவது சிறந்ததெனத் தெரிவிப்பதாக பெங்களூர் ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

நன்றி: பரிகணக & BBC


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உங்கள் கம்ப்யூட்டரை இளமையாக வைத்திருக்க சில ஐடியாக்கள்

உங்கள் கம்யூட்டர் எருமை மாடு மாதிரி இயங்குகிறதா? டிஸ்க்கில் இடம் இல்லையா? அடிக்கடி புரோகிராம்கள் "hang" ஆகிறதா? இந்தச் சிக்கல்களை சமாளிக்க சில யோசனைகள்.

Windows 98-ல் 64MB RAM போட்டும் System ஆமை வேகத்தில் வேலை செய்வது சகஜம்தான். பலர் கூடுதலாக RAM சேர்க்கவேண்டுமா என்று யோசிப்பார்கள். சிலருக்கு டிஸ்க்கில் இடம் இருக்காது. உங்கள் கம்ப்யூட்டரை ஒழுங்காகச் செயல்பட வைக்க அதிலேயே பல உபயோகமான புரோகிராம்கள் இருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்தி, மேற்கொண்டு சில காரியங்களைச் செய்தால் சிஸ்டம் சூப்பராகிவிடும்.

## ஐடியா 1 : Hard Diskஐ ஒழுங்குபடுத்துங்கள்




உங்கள் Hard Diskல் தகவல், துணுக்குகளாக ஒழுங்கில்லாமல் சிதறிக் கிடக்கும். Operating System, காலியான இடத்தில் புதிய தகவல்களை சேமிப்பதால் கோப்புகள் (Files) தாறுமாறாகப் பரவியிருக்கும். இதனால் அவற்றைத் திறக்கத் தாமதமாகிறது. இவற்றை அருகருகே அடுக்கி வைத்தால் பிரச்சனை தீரும். துணுக்குகளாக (fragments) இருக்கும் தகவலை ஒழுங்குபடுத்த அடிக்கடி உங்கள் Driveகளை Defragment செய்ய வேண்டும். அதற்கான புரோகிராம்தான் Disk Defragmenter. இந்த மென்பொருளைப் பயன்படுத்தி defrag செய்வது சுலபம்.

Start Menuவில் Programs, Accessories, System Tools என்ற ரூட்டில் போனால் Disk Defragementer கண்ணில் படும். அல்லது Start Menuவில் Run-ஐ க்ளிக் செய்யுங்கள். defrag என்று டைப் செய்து Enter Keyயைத் தட்டுங்கள். எந்த Driveஐ சீராக்கவேண்டும் என்று கேட்கும். Driveஐத் தேர்ந்தெடுத்து OK பட்டனைத் தட்டுங்கள்.

Defragement பணி முடிய சமயத்தில் ஒரு மணி நேரம் கூட ஆகும். அதுவரை உங்கள் கணினியைத் தொடாமல் இருங்கள். எல்லா புரோகிராம்களையும் அணைத்து வையுங்கள் - குறிப்பாக Screen Saverகளை.

Defragement பணி ஆரம்பித்து 3 நிமிடம் கழித்து Screen Saver வந்தால் வேலை தடைப்பட்டுவிடும். மீண்டும் முதலிலிருந்து தொடங்கவேண்டியிருக்கும். Desktop மேல் Right Click செய்யுங்கள். Screensaver என்ற தலைப்பை க்ளிக் செய்யுங்கள். பிறகு Screensaverகள் பட்டியலில் None என்பதைத் தேர்ந்தெடுத்து OKஐ க்ளிக் செய்யுங்கள்.

மாதம் ஒரு முறையாவது நீங்கள் defrag செய்தால் Files வேகமாகத் திறப்பதைப் பார்க்கலாம்.

## ஐடியா 2 : குப்பையை டிஸ்போஸ் செய்யுங்கள்


சில கம்ப்யூட்டர்களில் இருக்கும் Windows Folderல் Temperory Internet Files, Temp ஆகிய Folderகளைத் திறந்து பார்த்தால் லேசான மாரடைப்பு வரும். இரண்டிலும் சுமார் 50 MBக்கு அநாவசியமான Files கிடக்கும். நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனிக்காமலே இந்த இரண்டு Folderகளிலும் குப்பை Files சேர்ந்துவிடுகின்றன. இதற்கு Disk Clean-up என்ற புரோகிராமைப் பயன்படுத்தலாம். இந்த புரோகிராம் மேற்கண்ட இரண்டு Folderகள் மட்டுமில்லாமல் Recycle Bin-ல் இருக்கும் Filesஐயும் அழிக்கும்.

System Tool-ல் இருக்கும் Disk Clea-up-ஐ க்ளிக் செய்யுங்கள். எந்த DriveவைClean செய்யவேண்டும் என்று கேட்கும். வேண்டிய Driveவைத் தேர்ந்தெடுங்கள். Temperory Internet Files, Downloaded Program Files, Recycle Bin, Temperory Files ஆகியவற்றைக் காட்டும். அவை tick ஆகியிருக்கவில்லை என்றால் tick செய்யுங்கள். OK பட்டனைத் தட்டுங்கள். Disk Clean-up Temp Folderல் இருப்பதை எப்போதுமே நீக்கிவிடாது. நீங்களே அந்த Folderஐத் திறந்து, அத்தனை Filesஐயும் select செய்து Delete செய்ய வேண்டியிருக்கும். அதே போல Temperory Internet Files-ல் இருக்கும் Cookies என்ற சின்ன Text Filesஐ அழிக்காது. குக்கிகள் உங்களைப் பற்றிய பல தகவல்களைத் தெரிந்துகொள்ள (உங்கள் அனுமதி இல்லாமல்தான்) வெப்சைட்கள் அனுப்பும் தூதுவர்கள் மாதிரி. இவற்றையும் நீக்கவேண்டும்.




Internet Explorer, Netscape Comunicator போன்ற Web Browserகளும் பல அநாவசியங்களை சேமிக்கின்றன. Netscape Cokiesஐயும் Cache Folderஇல் Internetல் நீங்கள் பார்த்த பக்கங்களையும் சேமித்து வைக்கிறது. முதலில் Internet Explorerஐப் பார்ப்போம். Internet Explorerஇன் Tools Menuவில் Options-ஐத் தேர்ந்தெடுங்கள் (Shortcut : Alt+T+O). பிறகு Temperory Internet Files என்ற பகுதியில் Delete Files என்ற பட்டனைத் தட்டுங்கள். அடுத்து வரும் Dialogue Boxல் Delete all offline content என்ற வாசகத்தை tick செய்து, OK-ஐத் தட்டுங்கள். அடுத்து settings பொத்தானை க்ளிக் செய்யுங்கள். View Files என்ற பொத்தானைத் தட்டுங்கள். Cookies பட்டியல் தெரியும். Ctrl+A Keysஐ அழுத்தி எல்லா Cookies ஐயும் தேர்ந்தெடுத்து Delete Keyஐ அழுத்துங்கள். ஒரு பெரிய சுமை தீர்ந்தது.

நீங்கள் நெட்ஸ்கேப்பையும் பயன்படுத்துபவராக இருந்தால் இப்படிச் செய்யுங்கள் : Edit Menuவில் Preferences-ஐத் தேர்ந்தெடுங்கள் (Shortcut:Alt+E+E). பிறகு Advanced என்ற பகுதியில் இருக்கும் "+" குறியீட்டை க்ளிக் செய்யுங்கள். Cache-ஐ க்ளிக்குங்கள். Clear Memory Cache, Clear Disk Cache ஆகிய இரண்டு பொத்தான்களையும் தட்டுங்கள். OK பொத்தானைத் தட்டுங்கள். இன்னொரு வேலை பாக்கி இருக்கிறது. My Computer அல்லது Windows Explorer இரண்டில் எதையாவது பயன்படுத்தி C:Files என்ற ரூட்டில் போய் Users என்ற Folderஐத் திறவுங்கள். உங்களுக்கு ஒரு User Name இருந்தால் அந்தப் பெயரில் ஒரு Folder இருக்கும். பெயர் இல்லை என்றால் Default என்ற Folder இருக்கும். அதில் இருக்கும் Cookies என்ற Fileஐ Delete செய்யுங்கள். ஒவ்வொரு முறையும் Cookies ஐ நீக்க இத்தனை வேலைகளைச் செய்வது சிரமம்தான். அதற்கென்று Cookie Eater போன்ற மென்பொருள்களைப் பயன்படுத்துங்கள் (download.com இல் Cookie Eater என்று தேடுங்கள்). Netscapeல் History Folderஐ சுத்தம் செய்ய : Alt+E+E, பிறகு Clear history பொத்தானை க்ளிக் செய்யுங்கள்.

இன்னொரு விஷயம் : நீங்கள் Outlook அல்லது Netscape போன்ற Email மென்பொருள்களைக் கொண்டு pop3 Emailஐப் பயன்படுத்துபவராக இருந்தால், படித்த மெயில்களை Delete செய்யுங்கள். தேவையான மெயில்களை புதிதாக ஒரு Folderஐ உருவாக்கி அதில் போட்டுக்கொள்ளுங்கள். Crash Folderஐ அடிக்கடி காலியாக்குங்கள். இல்லை என்றால் உங்களுக்கே தெரியாமல் MB கணக்கில் மெயில் சேர்ந்துவிடும்.

## ஐடியா 3 : தேவையில்லாத மென்பொருள்களைக் கண்டுபிடித்து நீக்குங்கள்

Start Menuவின் Programs Submenu அதிகம் நீளமாக இருந்தால் தேவையில்லாத மென்பொருள்கள் (Softwares) நிறைய சேர்ந்திருக்கிறது என்பதற்கான அறிகுறி அது. எந்தக் காலத்திலோ நீங்கள் Install செய்துவிட்டு மறந்துபோன Copmuter Games, நண்பர்கள் ஈ-மெயிலில் அனுப்பிய வேடிக்கையான புரோகிராம்கள், வித்தியாசமான Fonts, நமக்குக் கொஞ்சமும் சம்பந்தம் இல்லாத Computerserve, AOL, AT&T Softwares - இதெல்லாம் தேவைதானா? நீங்கள் பயன்படுத்தாத மென்பொருள்களை இப்படிப் பார்த்துப் பார்த்துக் கழற்றிவிட்டாலே கம்ப்யூட்டர் சுத்தமாக இருக்கும்.

தேவையில்லாத மென்பொருள்களை நீக்கும் வழி : பல புரோகிராம்களுடன் Uninstall வசதி தரப்பட்டிருக்கும். Start-Program Menuவில் நீக்கவேண்டிய மென்பொருளின் Submenuவில் uninstall செய்ய ஒரு Shortcut இருக்கும். அதை க்ளிக் செய்யுங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Uninstall வசதி உங்களுக்குத் தேவையில்லாத புரோகிராமில் இல்லை என்றால் Control Panelஇல் Add/Remove Programs மூலம் அதை நீக்கலாம். Start Menuவில் Settings Control Panel மேல் க்ளிக் செய்யுங்கள். Add/Remove Programs-ஐ Double Click செய்யுங்கள். நீக்குவதற்கான புரோகிராமை க்ளிக் செய்து தேர்ந் தெடுத்துவிட்டு Add/Remove பொத்தானைத் தட்டுங்கள். ஒரு குறிப்பு:ஒரு புரோகிராமை நீக்கும்போது, ஒரு குறிப் பிட்ட dll fileஐ பல புரோகிராம்கள் பயன்படுத்துகின்றன. 'இதை நீக்க வேண்டுமா?' என்ற dialogue box வரும். அதற்கு No to all என்ற பொத்தானை க்ளிக் செய்யுங்கள். அவசியமான dll files நீக்கப்படுவதை இது தவிர்க்கும்.

புரோகிராம்களை பிரச்னை இல்லாமல் நீக்க இன்னொரு வழி : download.com போன்ற ஒரு டவுன்லோட் சைட்டிலிருந்து ஒரு இலவச Uninstaller புரோகிராமை டவுன்லோட் செய்து பயன்படுத்தலாம். சில புரோகிராம்களை சரியாக நீக்கவில்லை என்றால் அவை கம்ப்யூட்டரை சீரியஸாக ரிப்பேர் செய்துவிடுகின்றன. Uninstaller-கள் ஆபத்தில்லாமல் இவற்றை நீக்கும்.

புரோகிராம்களை பாதுகாப்பாக நீக்கிய பிறகு C:/




Program Files Folderஐத் திறந்து பாருங்கள். நீக்கப்பட்ட புரோகிராமின் Folder ஏதாவது இருந்தால் அதையும் நீக்கிவிடுங்கள்.

அடுத்தது விண்டோஸ் components. கண் பார்வைப் பிரச்சினை உள்ளவர்களுக்காக Accessibility என்ற அம்சம் விண்டோஸில் இருக்கிறது. உங்களுக்கு அப்படி ஏதும் பிரச்னை இல்லை என்றால் அதைத் தூக்கிவிடலாம். இப்படி இன்னும் நிறைய உண்டு. Control Panelஇல் Windows Setup பகுதியில் பட்டியலிடப்பட்டிருக்கும் சில ஐட்டங்களைப் பாருங்கள் :

Accessibility - 4.6 MB (தேவைப்படாது)
Address Book - 1.5 MB (தேவைப்படாது)
Desktop Themes - 31.7 MB (அநாவசிய அலங்காரம்)
Wall Paper, Screen Saver ஆகியவையே போதும்)
Multilanguage Support - 5.4 MB (தேவைப்படாது)
Online Services - 1.2 MB (பயன்படாது)
WebTV for Windows - 35.7 MB (இந்தியாவில் பயன்படாது)

இவற்றில் வேண்டாததை நீக்க, அவற்றின் முன் கட்டத்தில் இருக்கும் tick குறியை நீக்கிவிட்டு OK



பொத்தானைத் தட்டுங்கள். கம்ப்யூட்டரை Restart செய்ய வேண்டும் என்றால் OK பொத்தானைத் தட்டுங்கள்.

நீக்கப்பட்ட மென்பொருள்கள் சில, Windows Registry-யில் அவற்றைப் பற்றிய விவரங்களை அழிக்காமல் போய்விடும். இந்த மிச்சங்களை சுத்தம் செய்ய RegClean என்ற இலவச புரோகிராம் இருக்கிறது. (Size : 774KB). download.com-ல் Regclean என்று தேடினால் கிடைக்கும். இது உங்கள் கம்ப்யூட்டருக்குத் தேவையான மென்பொருள்.

ஆக, சிஸ்டம் நன்றாக இயங்குவதற்கு இந்தக் கொள் கைகளைக் கடைபிடிப்பது நல்லது : மாதம் ஒரு முறையா வது டிஸ்க்கை defrag செய்ய வேண்டும், Cookies, Temperory Files போன்ற குப்பை சமாச்சாரங்களை நீக்க வேண்டும். அவசியமான மென்பொருள்களை மட்டும் Install செய்யவேண்டும், தேவையில்லாத விண்டோஸ் component-களை நீக்கவேண்டும். அப்புறம் கண்ட புரோகிராம்களையும் படங்களையும் இணையத்திலிருந்து டவுன்லோட் செய்து கொண்டிருக்கக் கூடாது.

-திவாகர்

நன்றி : Webulagam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கணினிகளை குறிவைத்து புதிய படையெடுப்பு!

"ஈ-ஸன்"

Trojan எனும் கணினி வைரஸ் வகையில் புதிய வரவு - Cryzip Trojan!

உங்கள் கணினியின் வைரஸ் பாதுகாப்பு வளையத்தை சாமர்த்திய மாக ஊடுருவி நுழையும் இந்த Trojan, உங்களை மடக்க கையாளும் வழியே தனி.

அனுமதியின்றி உங்கள் கணினிக் குள் நுழையும் இந்த Trojan, கணினியில் சேமிக்கப்பட்டுள்ள கோப்புக் களை சுருக்க வடிவுக்கு அதாவது zip கோப்புக்களாக மாற்றிவிடு கிறது. அதனாலென்ன, சுருக்கக் கோப்புக்களை winzip போன்ற மென் பொருளின் உதவியுடன் விரிவுபடுத் திக்கொண்டால் போச்சு என்று நீங்கள் நினைத்தால் - அங்கேதான் காத்திருக் கிறது பெரியதொரு ஆபத்து!

சுருக்கக் கோப்புக்களாக உருமா றிப் போயிருப்பவற்றை மீட்டுக்கொண் டுவர எத்தனிக்கும் உங்களை "Erased by Zippo! GO OUT!!!" எனும் செய்தி "அன்போடு" வரவேற் கும்.

ஏற்கனவே நீங்கள் சேமித்துவைத் திருந்த கோப்புக்கள் அழிக்கப்பட்டு அவற்றின் சுருக்கக் கோப்புக்கள் மட்டுமே எஞ்சியிருக்கும் நிலையில் - அவற்றை நீங்கள் மீட்டுக்கொள்ள உரிய அடையாளச்சொல்லை – Password ஐக் கொடுத்தால்தான் இயலும்.

உதாரணமாக, நீங்கள் ABC.DOC என்பதாக உங்கள் கோப்பு ஒன்றை சேமித்திருந்தால், Trojan இன் தாக் கத்தின்பின்பு உங்களுக்கு எஞ்சப் போவது "ABC_CRYPT.ZIP" எனும் பெயரிலான கோப்புத்தான்.

அத்தோடு "AUTO_ZIP_REPORT.TXT" எனும் கோப்பும் உங்களுக்கு "இலவச" இணைப் பாகக் கிடைக்கும். அடையாளச்சொல் என்னவென்றுதான் எங்களுக்குத் தெரியாதே, பின்னர் எப்படி கோப்புக் களை மீட்பது என்று திணறும் உங்க ளுக்கு இந்த "AUTO_ZIP_REPORT.TXT" கோப்பில் பதில் கிடைக்கும்.

"உங்களது கோப்புக்களை மீட்டெ டுக்கும் மந்திர நுழைவுச்சொல்லை நாங்கள் உங்களுக்குத் தரத் தயாரா யிருக்கிறோம் - நீங்கள் 300 டொலர் களை எமக்குச் செலுத்தும் பட்சத் தில்" என்று தொடரும் செய்தியில், இதுதொடர்பாக நீங்கள் பொலிஸில் முறைப்பாடு செய்வதோ, அல்லது இணையத்தில் பணம் பரிமாறுவோ




ரிடம் தொடர்புகொள்வதோ உங்க ளுக்கு எவ்விதத்திலும் பலனளிக்கப் போவதில்லை என்றும் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிடப்பட்டிருக் கிறது.

நுழைவுச் சொல்லை மீட்டெடுப் பதற்கென்று வடிவமைக்கப்பட்டி ருக்கும் எந்தவொரு மென்பொருளும் இந்த Trojan ஐ முறியடிப்பதில் இதுவரை உதவவில்லை. நுழைவுச் சொல்லின் நீளம் பத்துக்கும் மேற் பட்ட குறியீடுகளைக் கொண்டிருப்ப தால்தான் இந்தச் சிக்கல் என்று கருதப்படுகிறது.

Cryzip Trojan தாக்குதலால் Word, Excel, PDF கோப்புக்கள் மற்றும் JPG படங்கள் உட்பட அநேக வகையான கோப்புக்கள் பாதிக்கப்பட்டுள்ளமை அறியப்பட்டுள்ளது.

இந்த Trojan இனிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள பலர் இணையத் தின் மூலம் பணம் செலுத்தி நுழைவுச் சொல்லைப் பெற்றுக்கொண்டுள் ளனர். E-Gold பணப்பரிமாற்ற வலையமைப்பின் மூலமே பணத்தைச் செலுத்தவேண்டும். ஆயினும் இந்த E-Gold வலையமைப்புக்கும் Trojan அனுப்புநர்களுக்குமிடையில் எவ்வித தொடர்புமில்லை என்பது நிரூபிக்கப் பட்டிருக்கிறது.

Cryzip Trojan இன் அனுப்புநர்கள் யாரென்று இதுவரையில் தெரியவராத நிலையில், உங்களில் சிலரும் இந்தத் தாக்குதலுக்கு அடிபணிந்து பணத் தைச் செலுத்தி நுழைவுச் சொல் லைப் பெற்றுக்கொள்ளும் நிர்ப்பந் தத்துக்கு உள்ளாகியிருக்கலாம்.

இந்த அநாமதேய அனுப்புநர்களு டைய E-Gold வலையமைப்புக் கணக்கை முடக்கி வைப்பதற்கு பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றபோதிலும், இது Cryzip Trojan இன் தாக்கத்திலிருந்து கணினிகளைப் பாதுகாப்பதற்கான நேரடி நடவடிக்கையாக இருக்கப்போ வதில்லை, பண இழப்பை மட்டுமே கட்டுப்படுத்தும்.

கோப்புக்களை மீட்டெடுக்கத் திணறிக்கொண்டிருக்கும் கணினிப் பாவனையாளர்களுக்கு யார், எவ்வ கையில் உதவப்போகிறார்கள் என்பது இன்னும் புரிபடாத ஒரு சங்க திதான்!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வச்சேன் பார் ஆப்பு 'Blog''


தகவல் உதவி: ஸந்திமா திஸாநாயக்க
ஆக்கம்: தாரிக் அஸீஸ்

இணையத்தினூடாக Blog journal ஒன்றை ஏற்படுத்தி பராமரித்து வருதல் Blogging எனப்படும். இவ்வாறு Blogging செய்யுமொருவர் Blogger என அழைக்கப்படுவார். Blog என்னும் பதம், web log என்ற பதத்தின் சுருக்கப் பிரயோகமாக உரு வாகிய ஒன்றாகும்.

Blogger இன் விருப்பத்தின் பேரில் அவரின் சொந்தக் கருத்துக்கள், சிந்தனைகள் என்பவற்றைக் கொண்டு blog website காணப்படுவதாலேயே அது சாதாரண இணையத்தில் (website) இருந்து வேறுபடுகிறது. இதனாலேயே, அவை இணையத்திலே தினக்குறிப்பேடு (diary) எழுதுதல் என இனங்காணப்படுகின்றன.

சாதாரண website இலிருந்து blog வகையைச் சேர்ந்த website மாறுபடும் இன்னுமொரு விடயமும் உண்டு. அதாவது, அவை சாதாரண website போலல்லாது தொடர்ச்சியாக update செய்யப்படும். அத்துடன், இதில் புதிய பக்கங்களை, புதிய தரவுகளை உருவாக்கி தளத்தில் இடம்பெறச் செய்வது மிகவும் இலகுவான ஒரு காரியமாகும். பொதுவாக தலைப்பு (Title), வகை(Category), ஆக்கத்தின் முழு வடிவம்(Body of the article) என்ற ஒழுங்கில் புதிய தரவுகளை, புதிய பக்கங்களை தளத்தில் இலகுவாக இடம்பெறச்செய்யமுடியும்.

Blog இன் Home page இல் புதிய ஆக்கங்களைச் சேர்த்துக்கொள்ளல், புதிதாக ஒரு முழு ஆக்கப்பக்கத்தை உருவாக்குதல், ஆக்கங்களை திகதி, மற்றும் Category ஒழுங்கில் Archives



இல் சேர்த்துவைத்தல் என்பவற்றை Blog தளங்கள் தாமாகக் கவனித்துக் கொள்ளும் (Automated Templates).

இவ்வகையான Blog தளங்கள் சில வேளைகளில் செய்திச் சேவைகளைவிடவும் சிறப்பாகவும் சுதந்திரமாகவும் பல செய்திகளை அறிவிக்கின்றன. பெரிய பெரிய செய்தி நிறுவனங்களில் செய்தி ஆசிரியர், ஆசிரியர், மற்றும் உயரதிகாரிகளுக்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டி இருப்பதால் சில செய்திகளை செய்தியாளர்கள் வெளிப்படையாக, சுதந்திரமாக வெளியிட முடியாதநிலை ஏற்படும். பதிப்பாளர், விளம்பரதாரர் ஆகியோரைத் திருப்திப்படுத்தும் வகையில் தமது செய்திகளை, ஆக்கங்களை எழுதவேண்டிய நிர்ப்பந்தம் ஊடகவியலாளர்களுக்கு பிரதான ஊடகங்களில் காணப்படுகின்றன.

ஆனால், blog ல் அவ்வாறு எந்த வித பிரச்சினையும் ஏற்படாது. ஒருவர் தனது பிரதேசத்திலோ அல்லது நாட்டிலோ இடம்பெறும் செய்திகளை தானாக சுதந்திரமாக வெளியிடுவதற்கு blog வழிவகுக்கிறது. தனக்கு மேலே வேறெவருக்கும் கட்டுப்படாமல், வேறு யாரையும் திருப்திப்படுத்த வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லாமல் ஒருவர் தன்னுடைய கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிடுவதற்கு Blog வாய்ப்பளிக்கிறது.

பங்கேற்புச் செயற்பாட்டை ஊக்குவிக்கும் Open Source Movement ஐ Bloggers முழு அளவில் ஆதரிக்கிறார்கள். எவ்வித கட்டுப்பாடும் இன்றி வெளிப்படையாகக் கருத்துத் தெரிவிக்கும் இந்தத் தொழில்நுட்பத்தின் பண்பு அவர்களை பெரிதும் ஈர்க்கி றது. மென்பொருள் தயாரிப்புத் துறை யில் Linux வரவுடன் பெருவளர்ச் சிகண்ட இந்த Open Source Movement, தகவல் தொழில்நுட் பத்தை தனியொருவர் கட்டுப்படுத்தும் ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளிவைத்து, எவ்வித பணக்கொடுக்கல் வாங்கல்களுமின்றி அறிவைப் பரவலாக்க வழி செய்தது. Bloggers இன் செயற்பாடு இந்த இயக்கத்தை அரசியல், சமூகவியல் எனப் பல துறைகளுக்கும் விரிவாக்குகிறது.

பிரதான ஊடகங்களினால் வெளிப்படையாக சொல்லமுடியாத, சொல்லப்படாத பல்வேறு விடயங்களையும் Blog தளங்கள் வெளிப்படுத்துவதால், இருட்டடிப்புச் செய்யப்படும் பல விடயங்களும் வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்படுகின்றன. மேலும், சமுதாயத்தில் அடக்கப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், கருத்துச் சுதந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரம் மறுக்கப்பட்டவர்கள் என பலவீனமான நிலையிலிருக்கும் பல்வேறு தரப்பினரும் தமது கருத்துக்களையும், உள்ளக் கிடக்கைகளையும் வெளியுலகுக்குத் தெரியப்படுத்த Blog வழிசமைக்கிறது. இதன்மூலம் பிரதான ஊடகங்களினால், அரசாங்கத்தினால், அதிகார மட்டங்களினால் இருட்டடிப்புச் செய்யப்படும் பல்வேறு உண்மைகளும் வெளியுலகம் அறிந்துகொள்ள வழியேற்படுத்தப்படுகிறது. இந்த நிலைக்கு உதாரணமாக ஈரான் நாட்டில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தைக் கூறலாம்.


ஈரான் நாட்டின் உயரதிகாரிகளுக்கு bloggers இனால் மிகவும் தலையிடியாகும். அரசாங்கத்தின் வேலைகளை விமர்சித்து பலர் தங்கள் weblogகளைப் பராமரித்து வருகின்றமையே இதற்குக் காரணமாகும். கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம், இவ்வாறு weblog பராமரித்து வரும் இரண்டு நபர்களை கைதுசெய்த ஈரான் அரசாங்கம் அவர்களில் ஒருவரை 14வருடம் சிறைக்கு அனுப்பியது என்றால், இது எந்தளவுதூரம் இன்று உலகில் ஆதிக்கம் செலுத்தும் ஒரு விடயமாக மாறியிருக்கிறது என்பதைப் பார்த்துக்கொள்ளுங்களேன்.

எனினும், ஈரான் அரசாங்கத்தின் இந்தச் செயற்பாட்டை இந்த Weblog கலாசாரத்தின் பலத்தின் மூலமே அவர்கள் முறியடித்தார்கள். உலகம் பூராகவும் வசிக்கும் 80 இலட்சத்திற்கும் மேலான bloggers இச்செயலுக்கு தமது எதிர்ப்பை தெரிவிக்கும் பொருட்டு கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 22ம் திகதி இணையத்தினூடாக செயற்பாட்டு தினமொன்றை (Day of action) பிரபலப்படுத்தினர். அத்தோடு இச்செயலுக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் பொருட்டு 'Reporters without border' எனும் அமைப்பினால் ஒரு website ஆரம்பிக்கப்பட்டு, அதில் உலகம் பூராகப் பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் ஈரான் அரசாங்கத்தின் செயலுக்கு எதிராக தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர். இணைய வரலாற்றிலேயே இந்தச் சந்தர்ப்பமே மக்களின் எதிர்ப்பினை மிகவும் அதிகளவில் வெற்றிகரமாக வெளிக்காட்டப் பயன்படுத்தப்பட்டதாக கணிக்கப்படுகிறது.

Blog இனூடாக ஒரு புதிய ஊடகப் பதிப்புக் கலாசாரத்தை உண்டாக்க முடியும் என்று சிலர் எதிர்வுகூறியிருக்கிறார்கள். இன்று பத்திரிகைகளுக்கு, ஊடகங்களுக்கு செய்திகளை, கட்டுரைகளை வழங்கினாலும், அவற்றுக்கான கொடுப்பனவு ஒன்றைப் பெற்றுக்கொள்வது சாத்தியமற்ற விடயமாகும். இதற்குப் பதிலாக ஒருவர் தம்மிடம் இருக்கும் சரக்குகளை தமது Weblog இல் வெளியிட்டு, அவற்றின் முழு வடிவத்தைப் பெறுவதற்கு குறிப்பிட்ட தொகைப் பணத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும். இவ்வாறு புத்தகங்களைக்கூட PDF Fomat இல் வெளியிடலாம் என்கிறார் ஒரு Blog பாவனையாளர். இதன் மூலம் பாரம்பரியமான ஊடக மரபுகள் மாற்றியமைக்கப்பட்டு, ஊடகத்துறையில் புதிய புரட்சியை ஏற்படுத்தலாம் என்பது இவ்வாறானவர்களின் கருத்தாக இருக்கிறது.

இணையத்தினூடாக தமது blog களை பாராமரித்துவரும் blogger களிடையே தம்மையும் இணைத்துக்கொள்ள எவருக்கும் முடியும். தமக்குச் சொந்தமாக வலைத்தளமொன்றை(website) கொண்டுள்ள எவருக்கும் குறித்த தளத்தினூடாகவே தமது blog journal ஐ ஏற்படுத்தி பராமரித்துக்கொள்ள முடியும். அவ்வாறில்லாதவர்கள், blog journal க்கான இடத்தினை இலவசமாகவே பெற்றுக்கொள்ள முடியும்.

www.blogger.com எனும் website இலவசமாக blog களை ஏற்படுத்த உதவும் ஒரிடமாகும். இந்த website இனுள் சென்று தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் அடிப்படையில் செல்லும்போது எவருக்கு இலவசமாக பராமரித்துக்கொள்ளக்கூடிய blog journal இற்கான இடம் கிடைக்கும். பயனிபெயர் (user name), கடவுச்சொல் (password) என்பன ஞாபகத்தில் இருக்கும் நாள்வரை இந்த live journal ஆகிய weblog ஐ தமக்கு விரும்பிய வகையில் பராமரித்துக் கொண்டு செல்லமுடியும். இதற்கு எவரினதும் குறுக்கீடுகள் கிடையவே கிடையாது.



ஒரு தமிழ் Blog Site

எவ்வாறாயினும், Blog jurnal ஒன்றினை பராமரித்துவரும் செயற்பாட்டில் சில பலவீனங்களும் இருக்கவே செய்கிறது. ஒருவகையில் பொதுசன ஊடகமொன்றின் செயற்பாட்டை அது ஒத்தது என்றாலும், இதில் பெரிய வித்தியாசமொன்று உள்ளது. பொதுசன ஊடகங்களில் பொறுப்பான, மனிதாபினமானமுள்ள ஊடகவியலாளர்கள் சம்பந்தப்பட்டுள்ளார்கள், ஆனால் blog journal இல் அவ்வாறில்லை. இவை ஊடகவியலாளர்கள் அல்லாதவர்களினாலேயே பராமரிக்கப்பட்டு வருகிறது இதனால் இதன் நம்பகத்தன்மை கேள்விக்குள்ளாகலாம். எனினும், இந்த Blog கலாசாரம் பரவலாகி பலரும் இதனைப் பயன்படுத்தத் தொடங்கும்போது, அது படிப்படியாக நம்பகத்தன்மையைப் பெற்று, ஒரு புதிய கலாசாரமாக விரிவாகும் என்பதில் சந்தேகம் இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜாவாவைப் பற்றிச் சுழலும் உலகு...



**கட்டுரையாக்கம் :**
**சசி கிருஷ்ணமூர்த்தி சேரன்**
**Java Programmer**

தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரபல அறிவியல் புனைகதை எழுத்தாளர் சுஜாதாவின் கதைகளில் ஜீனோ என்ற விநோதமான ஒரு நாய் பாத்திரம் இடம்பெறுகிறது. ஒரு குட்டி றோபோவைப் போலவே இயங்கும் இந்த ஜீனோ வெகு சாதாரணமானதல்ல. அது கார்கூட ஓட்டும். அவருடைய கதைகளைப் படித்தவர்களுக்கு ஜீனோ மாதிரி ஒரு நாய் எங்களிடமும் இருந்தால் எப்படி இருக்கும் என்கின்ற உணர்வு ஏற்பட்டிருக்கும்.

இது எல்லாம் உண்மையா?... சாத்தியமா?... என்று அதன் உண்மைத்தன்மைகளை பின்னேரங்களில் அலசிப் பார்த்துக்கொண்டிருக்கும் போதே, ஜீனோவைவிட மூன்று மடங்கு தொழில்நுட்பம் கூடிய நாய்கள் கண்டுபிடிக்கப்பட்டு சந்தைக்கு வந்துவிட்டன.

காலையில் எழும்புவதற்கு அலாரம் வைத்துவிட்டு அலாரம் அடிக்கும் போது நீங்கள் திரும்பிப்படுத்தால் உங்களுடைய காதைப் பிடித்துத் திருகி எழுப்பிவிடும் கடிகாரங்களும், வேலைவிட்டுத் திரும்பிவந்தால் நீங்கள் களைத்துப்போயிருக்கிறீர்கள் என்று தெரிந்து கோப்பிபோடும் இயந்திரங்களும் இன்று கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன.

இவை மட்டுமா, உங்களுடைய மனநிலைக்கு ஏற்றமாதிரி புறோகிறாமை பிழையாக எழுதி புறெஜக்ற் மனேஜரிடம் திட்டுவாங்கும் நாட்களில் சோகமான பாட்டுக்களையும், உங்களுடைய சம்பளம் கிடைக்கும் நாளில் மனதுக்கினிமையான "ரப்" பாட்டுக்களையும் தானாகவே ஒலிபரப்பும் பிளேயர்களும் என்று...

என்ன இது... கனவா... இல்லை வெறும்கதையா? என்னையா? என்னத்தைப்பற்றிக் கதைக்கிறோம்.

அது தான் ஜாவா(Java). கணினி மொழிகளின் அரசன். ஜாவாவினால் முடியாதது எதுவுமேயில்லை. இந்தச் சந்தேகங்களையெல்லாம் ஜாவா எப்போதோ கடந்து வந்துவிட்டது.




பொதுவாக இன்றைக்கு எல்லோராலும் ஜாவா என்னும் சொல் உச்சரிக்கப்பட்டாலும், அதன் அறிமுகமும் செயல்பாடுகளும் பலருக்கு புதிராக வேயிருக்கிறது. உண்மையில் ஜாவா என்றால் என்ன? இதைப் பற்றி நாங்கள் கதைத்துக்கொண்டிருக்கும்போதே sun மற்றும் Microsoft க்கிடையில் இந்த ஜாவா மொழியினால் ஒரு பனிப்போரே நடந்துகொண்டிருக்கிறது என்பது தெரியுமா உங்களுக்கு?..

ஜாவா எப்போது கண்டுபிடிக்கப்பட்டது? தற்பொழுது அது என்ன செய்கிறது போன்ற மர்மமான பல கேள்விகளுக்கும் மர்ம முடிச்சுகளுக்கும் இந்தக் கட்டுரைமூலம் விடை காண முயல்வோம்.

ஜாவா என்னும் கணினி மொழி sun microsystem நிறுவனத்தினால் 1991ஆம் ஆண்டு ஏனைய கண்டுபிடிப்புகளைப்போல ஒருநாள் எதேச்சையாக கண்டுபிடிக்கப்பட்டது. கிறீன் புறெஜெக்ற் (Green Project) என்று அழைக்கப்பட்ட மென்பொருள் தயாரிப்பில் சண் நிறுவனத்தின் மென்பொருள் வடிவமைப்பாளர்கள், ஜேம்ஸ் கோஸ்லிங் என்பவரின் கீழ் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்த நேரமது. அவர்கள் ஸ்ரார் 7(Star 7) எனப்படும் Device ஒன்றை வடிவமைத்தார்கள். அதற்கான operating system இன்னுமொரு கணினி (மொழியான c++ ஐ (c ஒரு கணினிமொழி. c++ அதன் திருத்தியவடிவம்) ஐப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், எங்களைப்போலவே அதில் திருப்திப்படாத ஜேம்ஸ் கோஸ் லிங்கும் அவரது சகாக்களும் புதிய கணினி மொழியொன்றை ஸ்ரார் 7க் காக கண்டுபிடித்தார்கள்.


ஜேம்ஸ் கோஸ்லிங் ஜாவாவைப் போலவே புதிரான ஒரு மனிதர். தன்னுடைய அலுவலக அறை ஜன்னலைத் திறந்து ஜன்னலுக்கு வெளியே நின்ற "ஓக்" மரத்தைப் பார்த்துவிட்டு தன்னுடைய புத்தம் புதிய கண்டு பிடிப்புக்கு "ஓக்" என்று பெயரை வைத்துவிட்டார். ஆனால், அவரைப் போலவே இன்னும் பல மென்பொருளாளர்கள் இயற்கை இரசிகர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதுதான் ஆச்சரியம். ஓக் என்ற பெயரை அவர்கள் ஏற்கனவே தங்களுடைய கணினி மொழிக்குச் சூட்டியிருந்தார்கள்.

என்ன அமெரிக்கர்கள் இவர்கள்! முன்வீட்டிலோ, பக்கத்து வீட்டிலோ இருக்கும் பெண்களின் பெயர்கள் இவர்களுக்கு ஞாபகம் வராமலா போய்விட்டது. புயலுக்கெல்லாம் கத்தரீனா என்றும் ரீட்டா என்றும் பெயர்வைக்கத் தெரிகிறதே.. என்று நீங்கள் ஆதங்கப்படலாம். சண் நிறுவனத்திற்கும் அது விளங்கியிருக்கும். அதனாலோ என்னவோ இந்தப் புதிய கண்டுபிடிப்பிற்கு சண் கம்பீரமாக ஜாவா(Java) என்று பெயரை மாற்றியது.

ஜாவா ஒரு Platform independent கணினி மொழி. அதாவது இதனால் windows operating system இலும் இயங்கமுடியும், அப்பிளின் Macintosh operating system இலும் இயங்கமுடியும். சண்ணின் Solaris operating system மிலும்கூட இதனால் இயங்கமுடியும்.

இதற்காகவே ஜாவாவிடம் மிகப் பெரிய ஆயுதம் ஒன்று இருக்கிறது. அதுதான் [JVM] **Java Virtual Machine**. இது இருக்கும்வரை உங்களுக்கு கவலை வேண்டாம். உங்களது புறோகிறாம் எந்தக் கணினியிலும் இயங்கும். ஜாவாவிற்கு இப்படிப் பல சிறப்பம்சங்கள் இருந்தாலும், குறிப்பி டும்படியான இதன் சிறப்பம்சங்களில் இன்னுமொன்றும் இருக்கிறது.

ஜாவா ஒரு முற்றுமுழுதான Object oriented கணினி மொழி. விளங்கும் விதத்தில் சொன்னால், ஜாவாவில் அதன் ஒவ்வொரு செயற்பாடுகளும்



class களாகவே எழுதப்படுகிறது. ஜாவாவின் இந்தச் சிறப்பு அதனுடைய செயற்பாடுகளையும் அதைக் கொண்டு செய்யப்படும் செயற்பாடுகளையும் பெருமளவில் இலகுவாக்குகிறது.

அட ஜாவாவுக்குள் ஏதோ விஷயமிருக்கிறதென்று விளங்குது தானே!!. பொறுங்கள்.. இன்னுமிருக்கிறது.

பொதுவாக கணினி மொழிகளில் memory management ஒரு சவாலான பிரச்சனை. சில சமயங்களில் அல்ல பெரும்பாலான சமயங்களில் கணினி மென்பொருளாளர்கள் எதிர்நோக்கும் file not found பிரச்சனைக்கு இதுதான் காரணமாகும். ஆனால் ஜாவாவிடம் இதெல்லாம் நடக்காது.

அதனிடம் ஏற்கனவே ஒரு குப்பை பொறுக்குபவர்[garbage collector] வேலைசெய்கிறார். நாங்கள் செய்ய வேண்டியதெல்லாம் அவரைச் சரியாகப் பயன்படுத்துவது மட்டுமே. இன்னுமொரு ஜாவாவின் பாராட்டப்பட வேண்டிய அம்சமொன்று இருக்கிறது. அது ஆவணப்பாதுகாப்பு. [secure].

நீங்கள் பல இணையத்தளங்களை ஒவ்வொருநாளும் பார்வையிடுகிறீர்கள். முக்கால் வாசி இணையத் தளங்கள் unknown அதாவது உங்களுக்கு அறிமுகமில்லாதவை. உங்களுக்குத் தெரியாமலே உங்களுடைய Temp Internet Folder இவற்றிலிருந்து வரும் தகவல்களினால் நிரப்பப்பட்டு கொண்டிருக்கிறது. இதனால், உங்களுடைய Hard diskகிலிருக்கும் தகவல்கள் அழிக்கப்படாமலிருக்கவோ அல்லது உங்களுடைய System குதறப்படாமலிருப்பதற்கோ எந்தவிதமான உத்தரவாதமுமில்லை. ஆனால் இவற்றிலிருந்தெல்லாம் ஜாவா உங்களுக்கு அபயமளிக்கிறது.


எடுத்துக்காட்டாக, இணையத்தளத்தில் ஒரு ஜாவா applet புறோகிறாம் வேலைசெய்யும்போது அது கணினிக்கு விளங்கும் விதத்தில் மொழிபெயர்க்கப்படுகிறது.

அதற்கு முன்னர் அந்தப் புறோகிறாம் பாதுகாப்பு பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறது [Security check]. இதன்மூலம் பல சிக்கல்களிலிருந்து உங்களுடைய கணினி பாதுகாக்கப்படுகிறது.

ஜாவா கணினி மொழி கற்பதற்கு இலகுவானதென்பது இன்னுமொரு இனிப்பான செய்தி. ஆனால் அதற்காக, மூன்று வாரத்தில் ஜாவாவை கற்றுத்தருவதாக யாரும் சொன்னால் அவர் உங்களுக்கு அல்வா கொடுக்கப் பார்க்கிறார் என்றுதான் அர்த்தம். அவரை நிமிர்ந்து நேராகப் பார்த்துச் சொல்லுங்கள்.


"அப்படியானால் நீங்கள் கற்பிக்கப் போவது ஜாவா அல்ல". ஏனென்றால் ஜாவாவை மூன்று வாரங்களில் கற்றுக்கொள்ள முடியாது.

தீவிரமான வருடக்கணக்கான பயிற்சியும் அர்பணிப்புள்ள கற்றலும் இருந்தால் மட்டுமே நீங்கள் திறமையான ஜாவா மென்பொருளாளராக வரமுடியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## Sony Ericsson இன் அடுத்த படைப்பு

Sony Ericsson Walkman Phones இன் அணிவகுப்பில் தற்போது Sony Ericsson W300i புதிதாகச் சந்தைக்கு வருகிறது. EDGE வகையைச் சேர்ந்த இந்தத் தொலைபேசியில் MP3 மற்றும் AAC file பாடல்களைக் கேட்கமுடியும். இதில் FM Radioவும் இருப்பதால், முழுமையான ஒரு Music Handset ஆக இது அமைகிறது.

Sony இன் வழமையான பாரம்பரியமான Memory Stick Micro slot ஐ இந்தப் புதிய கைத்தொலைபேசி கொண்டிருப்பதால், 1 Gigabyte வரையிலான பாடல்களைக் கேட்கமுடிகிறது. இது USB connectivity யைக் கொண்டிருப்பதால், வழமையாக கைத்தொலைபேசிகளுடன் வருகின்ற அதற்கே உரிய connector cable ஐத் தொலைத்துவிட்டு அவஸ்தைப்படவேண்டியிருக்காது. Bluetooth வசதியையும் மறக்காமல் இதில் இணைத்திருக்கிறார்கள்.

கறுப்புவெள்ளை நிறங்களில் ஐரோப்பிய நாடுகளில் முதலில் வெளியிடப்பட்ட Sony Ericsson W300i நம்நாட்டுச் சந்தையை நோக்கியும் அணிவகுக்கத் தொடங்கிவிட்டது.

புது வரவு
New Arrivals

## முதலாவது Olympus Digital SLR Camera

கமெரா உற்பத்தி ஜாம்பவான்களான ஜப்பானின் Olympus நிறுவனம், தமது புதிய தயாரிப்பான முதலாவது Digital SLR Camera வான "E-330" ஐ சந்தைக்கு விட்டிருக்கிறார்கள். 7.5mega pixel உடன், Live MOS image sensor ஐயும் கொண்டுள்ள இந்தக் கமெரா, உலகின் முதலாவது Live viewing system ஐக் கொண்ட கமெரா என்ற பெருமையையும் பெற்றிருக்கிறது. இதிலுள்ள 2.5 அங்குல swivel LCD display மூலம் இது சாத்தியமாகிறது. 1,100 அமெரிக்க டொலர் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள இந்தக் கமெரா, 14-45mm/F3.5-5.6 zoom lense ஐயும் கொண்டுள்ளது.




புது வரவு
New Arrivals

# வருகிறது HD-DVD, Blu-ray Disc Drives




தற்சமயம் பாவனையில் உள்ள DVDகளை பிரதியீடு செய்ய, புதிய அதி உயர் செயற்றிறன்மிக்க (High - Definition) HD -DVD மற்றும் Blu-ray ஆகியனவும் அவற்றுக்கான இயக்கிகளும் (Drives) சந்தைக்கு விற்பனைக்கு வர உள்ளது.

இவை திரைப்படத்துறையில் பெரும் ஆதிக்கம் செலுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

HD -DVD உற்பத்தியில் Toshiba, NEC, and Intel போன்ற நிறுவனங்களும் Blu-ray உற்பத்தியில் Sony, Panasonic, and Samsung Electronics போன்ற நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளன.


சொனி (Sony) நிறுவனம் தனது முதலாவது Blu-ray disc player ஐ எதிர்வரும் ஜுலையில் 1000 டொலர் பெறுமதியில் அமெரிக்க சந்தைக்கு வெளியிட தீர்மானித்துள்ளது.

Sony player ஆனது 1080 நிரைகளைக் கொண்ட(Lines) தெட்டதெளிவான ஒளி பிம்பங்களை தருவதுடன், மிகத் தரமான ஒளிப்பிரிக்கையையும் தருகிறது. இத்துடன் HDMI (High-Definition Multimedia Interface) connector எனும் தொடர்பாக்கி இருந்தால் மட்டுமே இவற்றில் இருக்கும் படங்களை பிரதி (Copy) செய்யலாம். இது படத்தாயாரிப்பாளர்களுக்கு, தமது பதிப்புக்களின் பதிப்புரிமையை வழங்குகின்றது. ஆனாலும் மேற்குறிப்பிட்ட தொடர்பாக்கி இல்லாமலே உங்கள் தொலைக்காட்சி பெட்டியில் தெளிவான படம் பார்க்கலாம்.

Warner நிறுவனம் தனது HD-DVDக்களை இம்மாதம் முதல் வெளியிடவுள்ளது.

"Million Dollar Baby", "The Last Samurai", and "The Phantom of the Opera" "Batman Begins", "Constantine", "Training Day", and "The Matrix" என்பன அவர்கள் வெளியிட இருக்கும் ஒரு சில திரைப் படங்களாகும்.

# LifeDrive Mobile Manager





கையடக்கத் தொலைபேசிக்குள் கணினிச் செயற்பாடுகளைப் புகுத்திப் புதுமை படைக்கும் Palm தயாரிப்புக்களிலேயே புதிய புரட்சியாக 4GB Hard Drive ஐக் கொண்ட புதிய கையடக்கத் தொலைபேசி இப்போது சந்தைக்கு வந்திருக்கிறது.

Built-in Wi-Fi® and Bluetooth® wireless**2, 3** support வசதிகளையும் கொண்ட இந்த Palm தயாரிப்பின் மூலம், அவசர உலகின் நாளாந்த வாழ்க்கைச் செயற்பாடுகள் அனைத்தையும் இலகுவாக ஒழுங்குபடுத்திக் கொள்ள முடியும்.

சாதாரணமான ஒரு Desktop கணினியில் நீங்கள் பயன்படுத்தும் • office docs • Word, Excel, PowerPoint docs ஆகியவற்றை இதில் பயன்படுத்த முடிவதுடன், 300 பாடல்கள், 2 மணிநேர Video காட்சி, 1000 படங்கள் ஆகியவற்றையும் இதில் சேமித்துவைக்க முடியும்.


POP support உடன் கூடிய email & web , IMAP, voice recorder, MP3 player, photo viewer ஆகிய வசதிகளையும் இந்த Palm Mobile கொண்டிருக்கிறது.

என்னடா, அப்போ இதில் Bluetooth இல்லையா என்று கேட்டுவிடாதீர்கள். தவறாமல் அதையும் வைத்தே இருக்கிறார்கள்.






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




**தகவல் உதவி: ஆண்டோ பீற்றர்**

கணினிக் கல்வியைப் பொறுத்த வரை, எப்போதும் ஏதாவது ஓர் அலை அடித்துக் கொண்டே இருக்கும். மென்பொருள் உருவாக்க மொழிக் (Programming Language) கல்வியில் ஆரம்பித்து, Mainframe, Dot Com, Y2K, JAVA என அலையடித்து தற்போது Open Source, LINUX வரை அது வளர்ந்துசென்றுள்ளது. கணினித்துறையைப் பொறுத்த வரையில் இந்த வளர்ச்சிகளும் மாற்றங்களும் தொடர்ந்துகொண்டே இருக்கும்.

தற்போது வர்த்தக நிறுவனங்கள், தொழில்நுட்ப மையங்கள் முதல், நம்முடைய வீடுகள் வரையில் மல்டிமீடியா(MultiMedia) அலை வீசுகிறது. அதிக வேலைவாய்ப்புக்களையும், தொழில்வளத்தையும் பெருக்கி வருவதால் மல்டிமீடியா (MultiMedia) கல்விக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது. கல்வி, அச்சுத்தொழில் (Printing), பதிப்புத்துறை (Publishing), ஒலி ஒளி ஊடகம் (Audio & Vedio), மற்றும் இணையம் (Intrernet) என அனைத்துத் துறைகளிலும் இது அதிகம் பயன்படுவதால் அதிக பிரபல்யமும், முன்னேற்றமும் அடைந்துள்ளது.

**மல்டிமீடியா என்றால் என்ன?**

இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட வெவ்வேறு வகையான ஊடகங்களை இணைத்து அதன் மூலம் ஓர் கருத்தை, தொடர்புடைய நிகழ்ச்சிகளால் தெளிவாக வெளிப்படுத்



துவதே மல்டிமீடியா எனப்படுகிறது.

இன்னும் விரிவாக சொல்வதானால் எழுத்து (Text) வடிவம், வரைபடம் (Graphic Art), ஒலி (Sound), அசையும் சித்திரப்படக்காட்சி (Animation) மற்றும் ஒளிப்பதிவு (Vedio) என்பவற்றை ஒன்றிணைந்து ஒரு எண்ணத்தை அல்லது கருத்தை சொல்லப் பயன்படும் ஊடகமே (பல் ஊடகம்) மல்டிமீடியா எனப்படுகிறது.

அடிப்படையில் மல்டிமீடியா 8 துறைகளில் பயன்படுத்தப்படுகிறது. அவையாவன..

1. புகைப்படத்துறை (Photography).
2. அச்சுப்பதிப்புத்துறை (Printing & Publishing)
3. தொலைக்காட்சித்துறை (Television Production).
4. இணைய வடிவமைப்புத்துறை (Web designing)
5. மருத்துவத்துறை (Medical)
6. சினிமாத்துறை (Cinema)
7. கணினி ஓவியக்கலைத்துறை (Graphic designing)
8. கல்வித்துறை (Educatioan)

ஒரு குறிப்பிட்ட துறையினருக்கு மட்டுமல்லாமல், இன்று சிறுவர், இளைஞர், கற்பனைத்திறன் மிக்கவர்கள் என அனைவரும் விரும்பித் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் துறையாக மல்டிமீடியா விளங்குகின்றது.

**மாணவர்கள்**

படிக்கும் மாணவர்கள் இயல்பிலேயே ஓவியம் மற்றும் காட்சிப்படுத்தல்களில் (Visualising) அதிக ஆர்வம் உடையவர்களாக இருப்பர். அவர்களுடைய ஆர்வத்தினையும், ஓவியத்திறனையும் ஊக்குவிக்கும் விதமாகவும், இன்னும் சற்று அதிகரிக்கும் விதமாகவும், மேலும் தங்களை அவர்கள் இத்துறையில் பட்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைதீட்டிக் கொள்ளவும் பல மென்பொருள்கள் உள்ளன. அனிமேட்டர் புரோ (Animator Pro) என அழைக்கப்படும் இருபரிமாண (2D) அசையும் உருவங்களை உருவாக்ககூடிய மென்பொருள் இவற்றுள் மிகவும் பயனுள்ளதாகும். தொலைக்காட்சியில் வரும் அசையும் சித்திரக் கதைகள் (Cartoons) இவ்வகையான மென்பொருள்களினாலேயே உருவாக்கப்படுகிறது. இதைவிட Photoshop, Flash போன்ற மென்பொருள்களும் மல்டிமீடியா துறையில் பல மாணவர்கள் தம்மைப் பட்டை தீட்டிக் கொள்ள உதவுகிறது.


**புகைப்பட கலையகங்கள் (Studio / Processing Lab)**

ஒரு கறுப்பு - வெள்ளை புகைப்படத்தை வர்ணப் புகைப்படமாக மாற்றவும், ஒரு புகைப்படத்தில் நாம் நினைத்த மாற்றங்களைச் செய்யவும் Adobe Photoshop எனும் மென்பொருள் பெரிதும் உதவுகின்றது. இதனைப் பயன்படுத்தி படங்களை மேலும் மெருகூட்டவும், நாம் வேண்டிய விளைவுகளை(Effects) ஏற்படுத்தவும் முடியும்.




**ஒலி ஒளிப்பதிவு கலையகங்கள் (Audio-Vedio Editing Studio)**

விசேட நிகழ்வுகளை ஒலி ஒளிப்பதிவு (வீடியோ) செய்யப்பட்ட காட்சிகளில் விசேட மெருகூட்டல் அம்சங்களைச் சேர்க்கவும், புதிய விடயங்களை அதில் புகுத்தவும் Adobe Premier எனும் மென்பொருள் பெரிதும் உதவுகின்றது. ஒலிப்பதிவுத் துறை யில் இன்று கணினிமூலம் Editing செய்வதற்கு ஏராளமான மென்பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஏ.ஆர்.ரகுமான், யுவன் சங்கர் ராஜா என தமிழ் திரையிசைப் பாடல் துறையில் இன்று கலக்கிக்கொண்டிருப்பவர்கள் எல்லாம் இப்படியான பல்வேறுவிதமான மென்பொருள்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.




**மருத்துவத்துறை (Medical Field)**

Endoscope என அழைக்கப்படும் நோயாளியின் உடலினுள் மிகச் சிறிய கமராவைச் செலுத்தி பாதிக்கப்பட்ட பகுதியை அல்லது நோயை ஒளிப்படம் மூலம் அறிந்துகொள்ளும் சிகிச்சை முறையிலும், பெரிய சத்திர சிகிச்சைகள் (Surgery), பல் மருத்துவம் (Dental), மற்றும் பகுத்தாய்வு (Scanning) என்பவற்றில் பெறப்படும் தரவு, படங்கள் என்பவற்றை பல் வேறு வகைகளாகப் பதிவுசெய்து பாதுகாக்க மல்டிமீடியா மென்பொருள்கள் பெரிதும் உதவுகின்றன.



இவை தவிர **பாடப்புத்தகங்களை CDகளில் சேமித்தல், விளம்பர உருவாக்கம், இணைய வடிவமைப்பு, சினிமா தயாரிப்பு** என பல துறைகளில் மல்டிமீடியா இன்று செல்வாக்குச் செலுத்துகின்றது.


ஒவ்வொரு துறைகளிலும் விசேடமாகப் பயன்படுத்தக்கூடிய மல்டிமீடியா மென்பொருள்கள் (Multimedia Software) ஏராளமாக இருப்பதால், உங்களுடைய துறைக்குத் தேவையான மிகவும் பொருத்தமான மென்பொருளைத் தெரிவுசெய்து, சிறந்த வழிகாட்டலுடன் கூடிய கற்கை நெறியை வழங்கும் நிறுவனங்களில் அவற்றைக் கற்றுத் தேர்வது நல்லது. அல்லாதுபோனால், உங்களுடைய துறைக்கு மிகவும் பொருத்தமான மென்பொருள் ஒன்றைத் தெரிவு செய்து வாங்கிவிட்டீர்களானால், Learnig CD கள் மூலமாகவும், உங்களுடைய சுயகற்றல் முயற்சியின் மூலமும் நீங்கள் அந்த மென்பொருளில் தேர்ந்த விற்பன்னர் ஆகிவிடலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமைக்க மறந்த கண்கள்









கணினித் திரைகளை தொடர்ந்து பார்ப்பவர்களின் கண்கள் பாதிப்புக்குள்ளாகும் அபாயம் அதிகரித்துள்ளதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

கணினி பாவனையாளர்கள் மிகச்சிக்கலான தொடர் தரவுகளை அல்லது சிறிய எழுத்துக்களை அவதானிப்பதற்காக தமது கண்களை அதிகமாக அழுத்தத்துக்குள்ளாக்குவதால், கண்கள் களைப்படைவது மட்டுமல்லாமல் கண்கள் இமைக்கவும் மறக்கிறது. இதை வறண்ட கண்கள் (Dry eye) என்பர். கண்கள் செக்கனுக்கு இமைக்கும் எண்ணிக்கையில் சரி பாதியாக இமைக்கும் எண்ணிக்கை குறைகிறது.

பலரும் தம்மை அறியாமலே இவ்வாறு தமது கண்களை களைப்படையச் செய்கின்றனர். அவர்கள் கணினித் திரைகளை தொடர்ந்து நோக்கும் போது சிறிய தரவுகளை தெளிவாக நோக்கவும், அதிக பிரகாசத்தை தவிர்ப்பதற்காகவும், கண்கள் அதீத பிரயத்தனத்தில் ஈடுபடுவதால் கண்கள் களைப்படைகின்றன. இதுவே வறண்ட கண்கள் (Dry eye) ஏற்பட காரணமாகிறது. முடிவில் கண்களில் இருந்து நீர் வடிதல். பார்வைக் குறைபாடு என்பன ஏற்பட இது வழிசமைக்கிறது.



# ALT + TAB




பல செயலிகளை ஒரேவேளையில் திறந்துவைத்து வேலைசெய்து கொண்டிருக்கும் வேளையில் உடனுக்குடன் விரும்பிய செயலியொன்றின் சாளரத்தை(Window) திரையில் தோன்றச் செய்வது எப்படித் தெரியுமா? வழமையாக Mouseஐப் பாவித்து குறித்த செயலியின் Task Barல் சுருங்கியுள்ள (Minimize) பகுதியில் Click செய்வதன் மூலம் அதனைத் திரையில் பார்க்கமுடியும். இதற்கு வேறோர் குறுக்குவழியும் இருக்கிறது.

Alt விசையினையும், Tab விசையினையும் ஒன்றுரே அழுத்தினால் ஒரு சிறு சாளரம் திரைநடுவில் தோன்றும். அவ்வேளை TAB விசையின் மீதிருந்து விரலை எடுத்துவிடவேண்டும். Alt விசை மீதுமட்டும் உங்கள் விரல் பதிந்திருக்க வேண்டும். அச்சாளரத்தில் நீங்கள் Task bar ல் சுருக்கி அல்லது பெருப்பித்து வைத்திருக்கும் அனைத்து செயலிகளினதும் குறியீட்டுப் படங்கள் ஒரு நிரையில் காணப்படும். அதில் ஒன்று சதுர வடிவப் பெட்டியொன்றின் மூலம் தெரிவுசெய்யப்பட்டிருக்கும்.

அந்தச் செயலி அந்த folder பற்றிய விளக்கம் கீழுள்ள நிரையில் காணப்படும். இவ்வேளையில் நீங்கள் Alt விசையிலிருந்து கையை எடுக்காமல் Tab விசையினை மாறி மாறி கையை எடுத்து அழுத்துவதன் மூலம் பெரிதாக்க வேண்டிய செயலியினை• தெரிவுசெய்தபின் முதலில் Tab விசையிலிருந்து விரலையும் பின்னர் Alt விசையின் மீதிருந்த விரலையும் எடுக்க வேண்டும். இப்போது நீங்கள் விரும்பிய தெரிவு செய்த செயலி திரையில் பிரசன்னமாயிருக்கும்.

நன்றி: "கம்ப்யூட்டர் ஃபோக்கஸ்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஓரே பார்வையில் பல மின்னஞ்சல்கள்

## Microsoft Outlook

வளர்ந்துவரும் இளம் சந்ததியினரால் மட்டுமல்லாது பெரும்பாலான பெரியவர்களினாலும் பெரிதும் பேசப்படும் விடயங்களில் முக்கிய இடத்தை மின்னஞ்சல் (e-mail) பெற்றிருக்கிறது. இதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று மிக விரைவாக தொடர்பு கொள்ளக்கூடியதாகவும், மின்னஞ்சல் முகவரிகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இருப்பதாகும்.

தற்போது, Hotmail, Yahoo, Gmail என மூன்று இலவச மின்னஞ்சல் சேவையை வழங்கும் இணையங்கள் உள்ளன. ஆகையால், அவரவர் தேவைகளை பொறுத்து, ஒருவர் எத்தனை முகவரிகளையும் வைத்திருக்கலாம்.

இப்படி ஒன்றுக்கு மேற்பட்ட முகவரி உடையோர் ஒரே தடவையில் அனைத்தையும் பார்ப்பதில் காலவிரையம் ஏற்படுகிறது. காரணம் ஒவ்வொரு முகவரியாக உள்நுழைவதில் ஏற்படும் காலதாமதமே. இவை அவரவர் பயன்படுத்தும் கணினியின் (Computer) தன்மை மற்றும் இணைய சேவை வழங்கிகளின் (server) தன்மையைப் பொறுத்து வேறுபடும்.

இக்காலதாமதத்தை குறைப்பதற்கான இலகு வழி அனைத்து மின்னஞ்சல்களையும் ஒரே தடவையில் பார்வையிடக்கூடிய வகையில் ஒழுங்கமைப்பதேயாகும். இதற்காகவே விசேடமாக வடிவமைக்கப்பட்ட பல மென்பொருள்கள் (Softwares) இன்று புழக்கத்தில் உள்ளன. அவையாவன, Outlook 2003, Outlook Express 6, மற்றும் Thunderbird 1.5 என்பனவாகும்.

இன்று **Microsoft** மென்பொருளே அனேகரது பாவனையில் உள்ளதால் Outlook 2003, Outlook Express 6 என்பன கட்டாயம் அவர்களது கணினிகளில் காணப்படும்.

புதிய மின்னஞ்சல் கணக்கொன்றை Outlook 2003 main menu - Tools - Email Accounts - Add a new email account - Next எனும் முறையில் உட்புகுத்திக்கொள்ளலாம்.

எனினும் இவற்றைச் செய்வதற்கு உள்வரும், வெளிசெல்லும் இணைய சேவை வழங்கிகளின் (Incomming and outgoint server addresses) முகவரிகளை தெரிந்து வைத்திருக்கவேண்டும். இவை அனேகமாக, இலவச மின்னஞ்சல் சேவையை வழங்கும் இணையங்களில் மின்னஞ்சல் முகவரியை ஆரம்பிக்கும்போது தெரியப்படுத்தப்படும். இல்லையானால், மென்பொருள் வல்லுநர்களின் உதவியை நாடலாம்.

இவற்றைவிட, இவ்வகையான மென்பொருள்களைப் பாவிக்கும் போது முடிந்தவரை குறுக்குவழிகளை (Shortcuts) பயன்படுத்தப் பழகிக் கொள்வதன் மூலம் காலவிரயத்தைக் குறைத்துக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்லத் தமிழ் இனி...

Panacea மென்பொருள் நிறுவனம் தயாரித்த, தமிழ்க் கணினி ஆர்வலர்களுக்கு மிகவும் பயனுள்ள பல தமிழ் மென்பொருள்களும் எழுத்துருக்களும் அவற்றின் source code உடன் வெளியாகியுள்ளன. கணினியை தமிழ் மொழியிலேயே பயன்படுத்த விரும்புபவர்களுக்கு இது ஒரு சிறந்த வரப்பிரசாதமாகும். இந்தியாவிலிருந்து வெளியாகும் தமிழ் கம்யூட்டர் சஞ்சிகையின் ஜனவரி 16-31 இதழுடன் இந்த மென்பொருள்கள் இலவசமாக ஒரு CDயில் வழங்கப்பட்டிருந்தது. இந்த மென்பொருள்கள் பற்றிய சில தகவல்களை உங்களுக்காக இங்கே தருகிறோம்.

## 1 முகவரி




தமிழில் முகவரித் தொகுப்பு மென்பொருள்.

இதில் நமக்கு வேண்டிய முகவரிகளை குடும்பம், தனிப்பட்ட, நண்பர், அலுவலகம், சகதோழர், பொதுவானவை, அனைத்தும் என முறைப்படுத்தி சேகரிக்க முடிகிறது. திருமண நாள் நினைவூட்டல், பிறந்தநாள் நினைவூட்டல் மற்றும் பிற நினைவூட்டல்களை தனித்தனியாக பதிந்து வைக்க வசதி செய்யப்பட்டுள்ளது. முகவரிகளை ஏறுவரிசை இறங்கு வரிசையில் வைக்கவும் தேடவும் வசதி உள்ளது. முகவரிகளை தமிழ் 99 முறை, தட்டச்சு முறை, ஒலியியல் முறைகளில் தட்டச்சு செய்ய முடியும் என்பது இதன் சிறப்பம்சமாகும்.

## 2 புலவன்-பாலம்




இது தமிழ் ஆங்கில அகராதியாகும். இதிலுள்ள புலவன் பகுதி தமிழ்-தமிழ் அகராதி. இது சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் வெளியிட்டுள்ள கழகத் தமிழ் அகராதியின் மென்பொருள் வடிவம். சொற்களை தமிழ் 99 முறை, தட்டச்சு முறை, ஒலியியல் முறைகளில் தட்டச்சு செய்து தேடலாம்.

பாலம் என்பது தமிழ்-ஆங்கில அகராதி. இவற்றில் புதிய வார்த்தைகளை நாமே சேர்க்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

## 3 சங்கம் புரோ




தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கான கணக்கியல் மென்பொருள் இது.

மகளிர் சுய உதவிக் குழுவின் கணக்கு வழக்குகளையும், உறுப்பினர்களின் பட்டியல், உறுப்பினர்களின் சேமிப்பு, உறுப்பினர்களின் கடன் பெறுதலையும், கடன் திருப்பிக் கொடுத்தலையும், உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கும் விவரங்களையும் இதில் பதிவு செய்யலாம். கணக்கு அறிக்கை பெற்றுக்கொள்ளலாம்.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சுய உதவிக் குழுக்களுக்கு அளிக்கும் பயிற்சி விவரங்களையும் பதிவு செய்து* தங்களது தேவைக்கேற்ப அறிக்கையைப் பெற்றுக்கொள்ளலாம்.

## 4 செல்வம்

தமிழ் கணக்குப் பதிவியல் மென்பொருள்.

இது கடைகள், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கான கணக்குகளை பராமரிக்க உதவும் மென்பொருள். இதன் மூலமாக ஒருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தனது நிறுவனத்தின் கணக்குகளை அல்லது நிறுவனத்தின் வெவ்வேறு பிரிவுக்கான கணக்குகளைப் பதிவு செய்து கொள்ளலாம். பதிவு செய்த தகவல்களிலிருந்து ரொக்கக் கணக்கு, பேரேடுகள், குறிப்பேடுகள், இருப்பாய்வு பெறுதல் மற்றும் செலுத்துதல், இலாப நட்டக் கணக்கு மற்றும் இருப்புநிலை ஆகியவற்றை பிரிவு வாரியாகவோ அல்லது மொத்தமாகவோ பார்வையிட்டுக் கொள்ளலாம் அல்லது அச்சுப் பிரதியாக எடுத்துக் கொள்ளலாம். இது தவிர ரொக்க மீதிப் பணம், தேய்மானம், வரவு செலவுத் திட்டக் கணக்கு வரவு செலவுத் திட்ட ஒப்பிடல் ஆகியவற்றை எடுத்துக் கொள்ளலாம். விலையுயர்ந்த கணக்கியல் மென்பொருள்களுக்கு நிகராக தமிழிலேயே வடிவமைக்கப்பட்டுள்ள சிறந்த மென்பொருள்.

5 வள்ளுவன்

இது தமிழ் ஆவணக்காப்பு மென்பொருள்

இந்த மென்பொருளில் கோப்புகள், செய்தித்தாளில் வந்த செய்திகள், புத்தகங்கள் பெறுதல் கொடுத்தல் பற்றிய தகவல்களை குறிப்பு வார்த்தைகளைக் கொண்டு ஆவணப்படுத்திக் கொள்ளலாம்.

ஆவணப்படுத்திய கோப்புகளை குறிப்பு வார்த்தைகளைக் கொண்டு தேடிக்கொள்ளலாம். கணக்கற்ற கோப்புகளையும், செய்தித் தாள் செய்திகளையும் ஆவணப்படுத்திக் கொண்டு ஒரு குறிப்பு வார்த்தையைக் கொண்டு அதனுடன் தொடர்புடைய அத்தனை ஆவணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த மென்பொருளில் வெறும் செய்திகளை மட்டுமல்லாமல் அதனுடன் சம்பந்தப்பட்ட படங்களையும், ஒலி, ஒளிப் படங்களையும் சேகரித்து வைத்து அதைத் திரும்பப் பார்வையிடவும் முடியும்.




6 வலையோடி

இது ஒரு வலை உலாவி

இது நெட்ஸ்கேப் நேவிகேட்டரின் தோற்றத்தில் இண்டர்நெட் எக்ஸ்புளோரரில் உள்ள வசதிகளோடு பயர் பாக்ஸ் உலாவியில் உள்ளபடி இணையப் பக்கங்களை அடுக்கிப் படிக்க முடிகிறது. நேவிகேட்டரில் உள்ளது போன்ற sidebar பல வசதிகளுடன் உள்ளது.

7 R4U

இந்த மென்பொருளில் தங்களுக்குத் தேவையான கோப்புகளை தமிழில் வடிவமைத்துக் கொள்ளலாம். இதில் Microsoft Word மென்பொருளில் உள்ள அனைத்து வசதிகளும் உள்ளது. இதன் மூலமாக Print preview செய்தல், Printout எடுத்தல், படங்களை உள்ளே சேர்த்தல், Alignment, Bullet மற்றும் Number உள்ளீடு செய்தல் எழுத்தின் வண்ணம் மற்றும் background வண்ணத்தை மாற்றுதல் டேபிள்களை உள்ளீடு செய்தல் போன்றவற்றை எளிதாகச் செய்ய முடியும். இதில் ஆங்கிலம் மற்றும் தமிழில் எளிதாக உள்ளீடு செய்யலாம். இதில் ஐந்து வகையான தமிழ் விசைப்பலகை இயக்கி உள்ளது. அவை Typewriter, Tamilnet 99, Romanised, Inscript, Modern Typewriter. இந்த மென்பொருளின் குறைபாடு என்பது இதில் tam தவிர யூனிகோடு உள்ளிட்ட பிற எழுத்துருக்களை பயன்படுத்த முடிவதில்லை.

8 Sarathy

இது tam, tab எழுத்துருக்களை விண்டோஸ் செயலிகளில் தட்டச்ச உதவும் விசைப்பலகை இயக்கி.

9 தமிழ் ஓலை

இந்த மென்பொருளில் சாதாராண வகையில் தங்களுக்குத் தேவையான கோப்புகளை தமிழில் வடிவமைத்துக் கொள்ளலாம். இந்த மென்பொருளில் மூன்று வகையான தமிழ் விசைப்பலகை இயக்கி உள்ளது. அவை

1. Monolingual -TAM,
2. Bi-Lingual - TAB,
3. Bi-Lingual - TISCII.

மற்றும் ஆங்கிலத்தில் கோப்புகளை வடிவமைக்கவும் இந்த மென்பொருளில் வசதி உள்ளது. வடிவமைத்த கோப்புகளை இடது, வலது, மைய வடிவங்களில் அமைத்துக் கொள்ளலாம்.

இந்த மென்பொருளில் TAM எழுத்துருவில் உள்ள கோப்புகளை TAB எழுத்துருவிற்கு மாற்றிக் கொள்ளவும், TAB எழுத்துருவில் உள்ள கோப்புகளை TAM எழுத்துருவிற்கு மாற்றிக் கொள்ளவும். TISCIஐ எழுத்துருவில் உள்ள கோப்புகளை TAB எழுத்துருவிற்கு மாற்றிக் கொள்ளவும். TAB எழுத்துருவில் உள்ள கோப்புகளை TISCIஐ எழுத்துருவிற்கு மாற்றிக் கொள்ளவும் முடியும்.

10 எழுத்துரு

இவை தவிர இத்தொகுப்பில் உள்ள 200 tam எழுத்து வடிவங்களும், 50 tab எழுத்து வடிவங்களும் DTP மற்றும் அச்சுத்துறையில் உள்ளவர்களுக்கு மிகவும் பயன்படக் கூடியவை.

இத்தொகுப்பில் உள்ள மென்பொ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**A possible 8-bit font encoding scheme for Tamil -v. 1.6**
**(Tamil standard Code for Information Interchange TSCII)**

| | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | A | B | C | D | E | F |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0 (0-15) | | | | | | | | | | | | | | | | |
| 1 (16-31) | | | | | | | | | | | | | | | | |
| 2 (32-47) | | ! | " | # | $ | % | & | ' | ( | ) | * | + | , | - | . | / |
| 3 (48-63) | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | : | ; | < | = | > | ? |
| 4 (64-79) | @ | A | B | C | D | E | F | G | H | I | J | K | L | M | N | O |
| 5 (80-95) | P | Q | R | S | T | U | V | W | X | Y | Z | [ | \ | ] | ^ | _ |
| 6 (96-111) | ` | a | b | c | d | e | f | g | h | i | j | k | l | m | n | o |
| 7 (112-127) | p | q | r | s | t | u | v | w | x | y | z | { | \| | } | ~ | |
| 8 (128-143) | ௦ | ௧ | ஸ்ரீ | ஜ | ஷ | ஸ | ஹ | க்ஷ | ஜ் | ஷ் | ஸ் | ஹ் | க்ஷ் | ௨ | ௩ | ௪ |
| 9 (144-159) | ௫ | ‘ | ’ | “ | ” | ௬ | ௭ | ௮ | ௯ | ஙு | ஞு | ஙூ | ஞூ | ௰ | ௱ | ௲ |
| A (160-175) | | ா | ி | ீ | ு | ூ | ெ | ே | ை | © | ௗ | அ | ஆ | இ | ஈ | உ |
| B (176-191) | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | ஃ | க | ங | ச | ஞ | ட | ண | த | ந |
| C (192-207) | ப | ம | ய | ர | ல | வ | ழ | ள | ற | ன | டி | டீ | கு | சு | டு | ணு |
| D (208-223) | து | நு | பு | மு | யு | ரு | லு | வு | ழு | ளு | று | னு | கூ | சூ | டூ | ணூ |
| E (224-239) | தூ | நூ | பூ | மூ | யூ | ரூ | லூ | வூ | ழூ | ளூ | றூ | னூ | க் | ங் | ச் | ஞ் |
| F (240-255) | ட் | ண் | த் | ந் | ப் | ம் | ய் | ர் | ல் | வ் | ழ் | ள் | ற் | ன் | | |

ருள்கள் மற்றும் எழுத்துருக்களில் எந்த மேம்பாட்டையும் செய்ய தமிழ் மென்பொருள் ஆர்வலர்களுக்கு உதவக்கூடிய வகையில் இவற்றின் source code கூடவே வழங்கப்பட்டிருப்பது மிகவும் பாராட்டுக்குரியது.


**"அறிவுசார் தொழில்நுட்பம் என்பது அபத்தம்!"**

இந்த இலவச மென்பொருள்களை தயாரித்து வெளியிட்டிருக்கும் 'பனேசியா' நிறுவனத்தின் இயக்குநர் திரு. துரைப்பாண்டி, அத்தனையையும் தாம் இலவசமாகவே வழங்க விருப்பதாக அறிவித்துள்ளார். அறிவுசார் சொத்துரிமை (Intelectual Property) என்பது அபத்தம் என்று வாதிடும் அவர், "நம் பாட்டன், பூட்டன் தந்த அறிவின் அடிப்படையில், நம் முன்னோர் சேமித்து வைத்துச்சென்ற அறிவின் மீது நின்றே நாம் இயங்குகின்றோம். அப்படி இருக்கும்போது, ஏதோ சூனியத்தில் இருந்து ஒன்றைக் கண்டுபிடித்தவர்கள் போல அறிவுசார் சொத்துரிமை என்று சொல்லி சமுதாயத்தைக் கொள்ளையடிப்பதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?" என்று கேள்வி எழுப்புகிறார். "பனேசியா உருவாக்கும் அத்தனை தமிழ் மென்பொருள்களையும் தமிழர்களுக்கு இலவசமாகவே வழங்கப்போகிறோம்"என்கிறார் துரைப்பாண்டி.

# Ctrl + Alt + Delete ஐக் கண்டுபிடித்தவர்

உங்களது கணினி இயங்க மறுக்கும், அல்லது Struck ஆகும் ஒவ்வொரு தடவையும் கணினியை Log off செய்து மீண்டும் இயங்கச் செய்யவோ, அல்லது இயக்கமற்று உறைந்துபோயிருக்கும் ஒரு புறோகிறாமை மூடிவிடவோ என பல்வேறு பிரச்சினைகளுக்கும் இலகுவான தீர்வாக இருப்பது Ctrl+Alt+Delete ஆகும். இவ்வாறு உங்களுக்கு தக்க சமயத்தில் உதவிசெய்யும் இந்தக் குறுக்கு வழியைக் கண்டுபிடித்தவர் டேவிட் பிரட்லி(David Bradly) என்பவர் ஆவார். கணினியின் இயக்கத்தை நிறுத்தாமல் ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரே வழி இந்த Ctrl+Alt+Delete என்பது அனுபவப்பட்டவர்களுக்குத் தெரியும்.

IBM நிறுவனத்தில் 28 வருடங்கள் சேவைசெய்து ஓய்வுபெற்றவரான பிரட்லி தன்னுடைய இந்தக் கண்டுபிடிப்புப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. "இதைவிட பல நல்ல விஷயங்களைச் செய்திருக்கிறேன். ஆனால் இதுதான் எனக்குப்



புகழைத் தந்துவிட்டது" என்கிறார் அவர். அவருடைய புகழ், கணினியில் அடிக்கடி ஏற்படும் கோளாறின் மூலம்தான் ஏற்பட்டிருக்கிறது.

அதனால்தானோ என்னமோ, "நான் இதைக் கண்டுபிடித்தது என்னமோ உண்மைதான். ஆனால், அதைப் புகழடையச் செய்த பெருமை பில் கேட்சையே சாரும்" என்கிறார் பிரட்லி பவ்யமாக.

பில் கேட்சின் பங்களிப்பையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அவரது விண்டோசில் ஏற்படும் பெரும்பாலான பிரச்சினைகளுக்கு அவர் இதைத்தான் தீர்வாகக் கொடுத்திருக்கிறார்.

டேவிட் பிரட்லி Ctrl மற்றும் Alt ஐத் தேர்ந்தெடுத்தமைக்கு காரணம், பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவருக்கு இரண்டு Shift Keys தேவைப்பட்டதுதான். அதைவிட Del Key, Keyboard இன் எதிர்ப்பக்கமாக அமைந்திருந்தது. அதன் தெரிவு எதிர்பாராத விதமாக இந்தக் Keyயை அழுத்துவதிலிருந்து தவிர்த்துக்கொள்ள உதவியது.

ஜூன் 1975இல் IBM நிறுவனத்தில் நுழைந்த டேவிட், செப்டம்பர் 1980இல் IBM இன் புதிய கணினி வடிவங்களை உருவாக்கும் 12 பேர் கொண்ட குழுவில் ஒருவராக இடம்பிடித்தார். இவர் Purdue பல்கலைக்கழகத்தில் பொறியியல் கலாநிதி பட்டம் பெற்றவர். கணினி தொடர்பான இரண்டு புத்தகங்களை எழுதியிருக்கும் இவர், ஏழு கணினி கண்டுபிடிப்புக்களுக்கான காப்புரிமையையும் பெற்றிருக்கிறார்.

இனி ஒவ்வொரு தடவை Ctrl+Alt+Delete ஐ பயன்படுத்தும் போதும் இந்த ஆளை ஒருக்கால் நினைத்துக்கொள்ளுங்கள்.

கம்யூட்டர் ஃபோக்கஸ்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Help Desk

## Sowtwareகளை Write செய்யலாமா?

ஒரு Computer இலிருந்து ஒரு மென்பொருளை(Sofware) CDயில் write பண்ணி எடுக்கலாமா?. அவ்வாறு நான் முயற்சி செய்தபோதும் அது பயனளிக்கவில்லை. Nero Express ஊடாக ஒரு Sofware ஐ எவ்வாறு ஒழுங்கு முறைப்படி write பண்ணலாம் என்பதை விளக்குக. ஒரு CDயில் ஒன்றுக்கு மேற்பட்ட Sofware களை write பண்ணலாமா என்பதையும் விளக்குக.

**M.B.A.மலிக்,**
***368/A, ஓட்டுப்பள்ளி வீதி,***
***ஏறாவூர்-06***

Computer இல் உள்ள Software ஐ நீங்கள் CDயில் write செய்யலாம். ஆனால், அதனை நீங்கள் முழுமையாக மற்றொரு Computerஇல் Install செய்து பயன்படுத்தக்கூடியதாக இருக்காது.

பொதுவாக Sofwareகளை Install செய்யும்போது, அது தேவையான ஒவ்வொரு Filesஜயும், வேறு வேறு Locationகளில் Save செய்திருக்கும். அத்தோடு Program Registryக்குத் தேவையான values ஐயும் அவை Add பண்ணியிருக்கும். இந்த நிலை யில் அந்த Sofwareஐ CD ஒன்றில் write செய்து எடுத்தாலும், அந்த Software செயற்படுவதற்குத் தேவை யான அனைத்து Filesஜயும் அது உள்ளடக்கியிருக்காது என்பதால், அதனை வேறோர் கணினியில் Install செய்து இயங்கச்செய்ய முடியாது.

அந்த Software அப்படியே உங்கள் கணினியில் Copy செய்யப்பட்டிருந்தால் நீங்கள் விரும்பியபடி CD யில் write செய்து கொள்ளலாம். ஒரு சில Sofwareகளைப் பொருத்தவரையில் அவற்றை Install செய்வதென்பதே Copy செய்வதாக இருப்பதால் முழு Program Files உம் ஒரு Folderக்குள் இருக்கும். அவற்றை வேண்டுமானால் நீங்கள் CDயில் write செய்து எடுத்துக்கொள்ளலாம். மற்றபடி ஒரு CDயில் அதில் இடமிருக்கும்வரை எத்தனை Softwareகளையும் Write செய்யலாமே

## 600MHz P3 Computerக்கு 800MHz Processor போடலாமா?

600MHz Processor, 40GB Hard Disc, 177 RAM உள்ள P3 Computer இன் வேகத்தை அதிகரிப்பதற்கு 800MHz அல்லது அதனிலும் கூடிய வேகமுள்ள Processorஐப் பொருத்தலாமா?.

**A.H.அன்வருள் சதாத்**
***205, காதியார் வீதி,***
***ஏறாவூர்-06***

அது உங்கள் Mother Board ஐப் பொருத்த விடயம். Mother Board இன் Bus Speed என்று சொல்லப்படும் தரவு கடத்தப்படும் வேகத்துடன்(Data Transwer Speed) நீங்கள் பொருத்தவுள்ள Processor இன் Bus Speed பொருந்துகிறதா என்பதைச் சரிபார்த்தே வேகம் கூடிய Processorஐ Mother Board இல் பொருத்தவேண்டும். இது ஒன்றும் செய்யமுடியாத காரியமில்லை. உங்களுக்கு Hardware விவகாரங்கள் ஓரளவு தெரியுமென்றால் பொருத்தமான Bus Speed உள்ள Processorஐ வாங்கிப் பொருத்தலாம். ஏதும் குழப்பம் இருந்தால் ஏன் மண்டையை உடைக்கிறீர்கள். அருகிலுள்ள Computer Service Centreஐ நாடி பிரச்சினையைச் சுலபமாகத் தீர்த்துக்கொள்ளுங்களேன்.

## .mov fileஐ மாற்றுவது எப்படி?

Nikon7600 ரக Still கமெராவில் உள்ள Video recording வசதியைப் பயன்படுத்தி எடுக்கப்பட்ட video fileஐ computerஇல் பதிவிறக்கியபோது .mov என்ற extension பெயருடன் வந்தது. அந்த fileஐ winsows media playerஇலோ, VCD Cutterஇலோ, Win Amp.5இலோ இயக்கிப்பார்க்க முடியவில்லை. அந்த fileஐ எந்த Applicationஇல் இயக்கிப்பார்க்க முடியும்? .mov extension உடன் உள்ள அந்த fileஐ Mpeg ஆகவோ, Avi ஆகவோ convert பண்ணுவதற்குரிய Softwaer ஏதேனும் உண்டா? தயவுசெய்து விளக்கம் தரவும்.

***எஸ்.அட்சரன்,***
***நாரஹேன்பிட்டி, கொழும்பு-05***

உங்களுடைய Nikon கமெராவுடன் தரப்பட்டிருக்கும் விசேட Software ஐப் பயன்படுத்தி உங்கள் கமெராவில் எடுக்கப்பட்ட video files ஐ Play செய்யக்கூடியதாக இருக்கும். பொதுவாக எந்தக் கமெராவுடனும் இவ்வாறான Softwareகள் வழங்குவார்கள். அது உங்கள் வசம் இல்லையென்றால், WinMPG Video Convert என்ற Softwareஜப் பயன்படுத்தி .mov file ஐ Mpeg ஆகவோ, Avi ஆகவோ convert செய்துகொள்ளலாம்.

இது தொடர்பான மேலதிக விளக்கம் தேவைப்பட்டால், Goole Search இல் ".omv" என்று type செய்து தேடினால் பெற்றுக்கொள்ளலாம்.

***(தகவல் உதவி: உ.சேக்கிழான்)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Microsoft® **Word** கற்போம்

Microsoft Office XP

# Keyboard குறுக்கு வழிகள்

A.L.M.Arushad



**Ctrl + A-**
type செய்த ஒரு பக்கத்தில் உள்ள எல்லாவற்றையும் தெரிவு (Select) செய்வதற்கு.

**Ctrl + B -**
தெரிவுசெய்யப்பட்ட (Select) எழுத்தை அல்லது சொற்களை அல்லது வசனத்தை **தடிப்பான(Bold)** எழுத்துக்களாக மாற்ற.

**Ctrl + C -**
type செய்த எழுத்தை அல்லது சொற்களை அல்லது வசனத்தை பிரதி (Copy) செய்ய.

**Ctrl + D-**
பல்வேறு எழுத்து வடிவங்களை (Fonts) பெறவும், எழுத்து அளவுகளை(Size) மாற்றவும், சொற்களுக்குகிடையேயான அல்லது வசனங்களுக்கிடையேயான இடைவெளி (Space) அளவுகளை மாற்றவும் உதவும் Menu ஐப் பெற.

**Ctrl + E-**
தெரிவுசெய்யப்பட்ட பந்தியை நடுக்கோட்டை மையப்படுத்தி ஒழுங்குபடுத்த (Align-Centre).

**Ctrl + F-**
வன்தட்டில் (Hard disk) சேமித்து வைத்த கோப்பை (File) தேடுவதற்கான (Find) Menu ஐப் பெற.

**Ctrl + G / H-**
type செய்த பக்கத்தில் உள்ள ஏதாவது சொல்லை இன்னோர் சொல் கொண்டு பிரதியீடு செய்ய Find & Replace.

**Ctrl + I -**
தெரிவுசெய்யப்பட்ட எழுத்தை அல்லது சொற்களை அல்லது வசனத்தை ***சரிந்த(Italic)*** எழுத்துக்களாக மாற்ற.

**Ctrl + J -**
தெரிவுசெய்யப்பட்ட பந்தியை இருபக்கமாகவும் நிரப்பி ஒழுங்குபடுத்த(Justify).

**Ctrl + K-**
வேறு கோப்புக்களுடன் (Files) இணைப்பை ஏற்படுத்திக் கொள்ள (Insert Hyperlink) உதவும் Menu ஐப் பெற.

**Ctrl + L-**
தெரிவுசெய்யப்பட்ட பந்தியை இடப்பக்கத்தை மையப்படுத்தி ஒழுங்குபடுத்த (Align-Left).

**Ctrl + M-**
தெரிவுசெய்யப்பட்ட பந்தியை அல்லது ஆவணத்தை 0.5 அங்குலம் வலப்புறமாக நகர்த்த (Tab).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Ctrl + N-
புதிய கோப்பு(File) ஒன்றை ஆரம்பிக்க.

Ctrl + O-
ஏற்கனவே பதிவாகி உள்ள கோப்பைத் திறக்க (File Open).

Ctrl + S-
கோப்பு ஒன்றை வன்தட்டில் பதிவுசெய்ய அல்லது சேமிக்க.

Ctrl + V-
ஏற்கனவே பிரதி எடுத்த எழுத்தை அல்லது சொற்களை அல்லது வசனத்தை பொருத்தமான இடத்தில் பதிவு செய்ய(Paste).

Ctrl + W-
திறக்கப்பட்ட கோப்பை(File) எமது வேலை முடிந்தவுடன் மூடிவிட(Close).

Ctrl + X-
தெரிவுசெய்யப்பட்ட சொற்களை அல்லது வசனத்தை அல்லது பந்தியை அகற்ற(Cut).

Ctrl+Y-
Ctrl+Z-மூலம் இறுதியாக அழித்தவற்றை மீண்டும் கொண்டுவந்த பின்னர் மீண்டும் அதை இல்லாமல் செய்ய.

Ctrl + Z-
இறுதியாக அழித்தவற்ற மீண்டும் கொண்டுவர.

# Bluetooth Technology




இன்று இன்ஃப்ரா ரெட் (Infra Red) தொழில்நுட்பம் மெல்ல மெல்ல மறைந்து புளூடுத் தலைதூக்கியுள்ளது. இலத்திரனியல் சாதனங்களுக்கிடையிலான கம்பிகளற்ற இடைத்தொடர்புக்கு இதன் பாவனை அதிகரித்து வருகிறது. சிறிய இடைவெளிகளுக்கு குறைந்த செலவில் தீர்வு காண்பதற்கு இதுவொரு சிறந்த தொழில்நுட்பமாகும்.

இதனைப் 10மீற்றர் இடைவெளி வரையில் பயன்படுத்தலாம். இரு சாதனங்களுக்குமிடையில் நேரடியான தொடர்பு இருக்கவேண்டிய தேவை இல்லை. இதில் அதிகப்படியான சுதந்திரம் உங்களுக்குக் கிடைக்கிறது. உங்கள் மடிக் கணினியில் இருந்து ஒரு தகவலை அடுத்த



அறையிலுள்ள printer ற்கு அனுப்பி print செய்து கொள்ளவும் முடியும்.


இது அனைத்துத் தயாரிப்பாளர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பமாக தற்பொழுது உள்ளது. கையடக்கத் தொலைபேசிகளில் இது இப்போது பிரபலமான ஒரு விடயமாகிவிட்டது. இதன் பயன்பாடு அதிகரித்துச் செல்லச் செல்ல, அதனை ஈடுகட்டுவதற்காக புதிய மென்பொருள்கள் மற்றும் புதிய உபகரணங்கள் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டவண்ணம் உள்ளன.

கம்பியற்ற இணைப்பில் ஒரு எல்லையற்ற தொடர்பாடல் வசதியை இது நடைமுறையில் எங்களுக்கு வழங்குகிறது. அதைவிடவும் இதன் பொதுவான அலைவரிசை உலகளாவிய ரீதியில் ஒரே தரப்படுத்தலில் உள்ளதால் இதனை நாம் எங்கும் பயன்படுத்தலாம். தகவல் பரிமாற்ற வரலாற்றில் இந்த புளூடுத் ஒரு வேகமான தொழில்நுட்பமாக இடம் பிடித்து வருகிறது.

நன்றி: "கம்ப்யூட்டர் ஃபோக்கஸ்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மின்னஞ்சல் முகவரியொன்றைப் பெற்றுக்கொள்வது எவ்வாறு?

இன்று பொதுவாக பிரபலமாக இருக்கும் மூன்று வகை மின்னஞ்சல் சேவை வழங்குநர்களான Hotmail, Yahoo, Gmail பற்றியும், அவற்றின் தனித்துவங்கள், சிறப்புக்கள் பற்றியும் கடந்த இதழில் பார்த்திருந்தோம். இந்த இதழில் எமக்குரிய தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரி ஒன்றை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம் என்பதுபற்றிப் பார்ப்போம்.

கடந்த இதழில் நாம் குறிப்பிட்டிருந் ததுபோல Hotmail இல் மிகவும் குறைவான மின்னஞ்சல் சேமிப்பிடமே வழங்கப்படுகிறது(2MB அளவானது). இதனால் விரைவில் நமது Mail Box நிரம்பிவிட, பல மின்னஞ்சல்கள் எமக் குக் கிடைக்காமலே போய்விடுகிறது.

இன்றைய உலகில் அதிகரித்து வரும் மின் தொடர்பாடல்கள்(e-communication) க்கு எமக்கு அதிகள விலான மின்னஞ்சல் சேமிப்பகம் தேவைப்படுவதால், Hotmail ஐ விட, 1Gygabite Mail Box ஐ வழங்கும் Yahoo, அல்லது Gmail க்குப் போவதே நல்லது. இவற்றிலும் Gmail முகவரி ஒன்றைப் பெறுவதற்கு ஏற்க னவே அந்தச் சேவையைப் பயன்ப டுத்தும் ஒருவருடைய சிபாரிசு தேவைப்படுவதால், Yahoo இல் முகவரி ஒன்றைப் பெறுவது இலகு வானதும், தேவைக் குப் போதுமானது மான ஒரு தெரிவாக இருக்கும்.

எனவே, Yahoo வில் முகவரியைப் பெற்றுக்கொள்வது எவ்வாறு என்பதை நோக்குவோம்.

படம் 1 இல் காட்டப்பட்டிருப்பது Yahoo! Home Page ஆகும். இதிலுள்ள Mail என்ற Icon ஐ Click செய்து உள்ளே நுழைந்தால், Yahoo Mail பகுதியை அடைவீர்கள்(படம் 2).

இங்கு ஏற்கனவே மின்னஞ்சல் முகவரி ஒன்றைக் கொண்டிருப்பவர் தன்னுடைய Yahoo! ID, Password ஆகிவற்றைக் கொடுத்து, தன்னுடைய மின்னஞ்சல் பகுதிக்குச் செல்லலாம்.


ஏற்கனவே Yahoo முகவரி ஒன்றைக் கொண்டிராதவர், தனக்குரிய முகவரி ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு Sign Up என்ற இடத்தில் கிளிக் செய்து திரையில் விரியும் படிவத்தை நிரப்பி தனக்குரிய முகவரியைப் பெற்றுக் கொள்ளலாம்(படம் 3).

இங்கு கேட்கப்பட்டபடி உங்கள் முதல், இறுதிப் பெயர்களைக் கொடுத்து, Preferred Content என்ற பகுதியில் Yahoo! US என்பதைத் தெரிவுசெய்யுங்கள்.

Yahoo! US என்பதைத் தெரிவுசெய் தால் மாத்திரமே உங்களுக்கு yahoo.com முகவரி கிடைக்கும். இல் லாதுபோனால், yahoo.co.uk(UKஐத் தெரிவுசெய்தால்), yahoo.co.in (Indiaவைத் தெரிவுசெய்தால்), yahoo.co.sg(Singhaporeஐத் தெரிவு செய்தால்) என்பதுபோன்ற முகவ ரியே கிடைக்கும்.


அடுத்து Yahoo ID பகுதிக்குள் நீங்கள் விரும்பிய முகவரியைக் கொடுத்து(உங்கள் பெயரையோ, அல்லது வேறேதேனும் விரும்பிய ஒரு பெயரையோ கொடுத்து) அந்தப் பெயரில் முகவரி பெறமுடியுமா என்பதை Check Availability of This ID என்ற பகுதியை அழுத்தி சரிபார்த் துக்கொண்டு, மேற்கொண்டு முன்னே றலாம்.

ஒருவேளை, நீங்கள் விரும்பிய ஒரு பெயரில் முகவரி பெறமுடியாது போ னால், (அப்படியானால் ஏற்கனவே அந்தப் பெயரில் ஒரு முகவரி இருக் கிறது என்பதுதான் அர்த்தம்) வேறு ஏதேனும் ஒரு பெயரைக் கொடுத்து அது ஏற்றுக்கொள்ளப்பட்டபின் இரக சிய குறியீடான Password ஐக்



படம் 1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம் 2

கொடுக்கலாம்.

அவதானம், நீங்கள் கொடுக்கும் Password ஐ தவறாது நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். அது இல்லாமல் உங்களுக்குரிய மின்னஞ்சல் பக்கத்துக்குள் நீங்கள் நுழைய முடியாது. மற்றையவர்களுடைய கண்ணுக்குப் படாதபடி அதனை எங்காவது எழுதி வைத்துக்கொள்வது நன்று.

தொடர்ந்து படிவத்தில் கேட்கப்படும் Security Question இல் ஒன்றைத் தெரிவுசெய்து. அதற்குரிய பதில் ஒன்றையும் கொடுக்கவேண்டும். உதாரணத்துக்கு Where did you first meet your spouse(உங்கள் காதலரை நீங்கள் முதன்முதலாக எங்கே சந்தித்தீர்கள்?) என்ற கேள்வியைத் தெரிவு செய்து அதற்குரிய பதிலைக் கொடுக்கலாம். இந்தக் கேள்விக்குப் பதிலளிப்பதற்கு கட்டாயம் உங்களுக்கு ஒரு காதலர் இருக்க வேண்டுமென்றில்லை.


இந்தப் பகுதியில் கேள்விக்கு நீங்கள் கொடுக்கும் பதிலையும் நினைவில் வைத்துக்கொள்வது அவசியம். ஒருவேளை உங்கள் Password ஐ நீங்கள் மறந்துபோனால், அதனை உங்களுக்குத் தருவதற்கு இந்தக் கேள்விக்குரிய பதில் உங்களிடம் கேட்கப்படும். அந்த வேளையில் இங்கு நீங்கள் கொடுக்கும் அதே பதிலைக் கொடுத்தாலே உங்களுடைய Password உங்களுக்கு வழங்கப்படும். இல்லாவிட்டால் அம்போதான்.

உங்களுடைய Passwordஐ வேறொருவர் களவாகக் கண்டுபிடித்து உங்களுடைய மின்னஞ்சல் பகுதிக்குள் நுழைவதைத் தடுப்பதற்காகவே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் எல்லாம்.

அடுத்து உங்கள் பிறந்த நாள் விபரத்தை நிரப்பிவிட்டு, அதற்கடுத்தாற்போல் இருக்கும் Zip/Postal Code என்ற பகுதிக்கு வாருங்கள். இதில் ஒரு சிக்கல் இருக்கிறது. நீங்கள் Preferred Content என்ற பகுதியில் Yahoo! US ஐத் தெரிவு செய்தபடியால் அமெரிக்காவில் உள்ள ஏதேனும் ஒரு மாநிலத்தின் Zip/Postal Code ஐயே இப்பகுதியில் கொடுக்க வேண்டும். இதைக் கண்டுபிடிப்பது சிரமம் என்றால், Google Search இல் Postal Code என்று கொடுத்து, அமெரிக்காவிலுள்ள ஒரு மாநிலத்தின் Postal Code ஐக் கண்டுபிடித்துக் கொடுக்கலாம்.

உதாரணத்துக்கு அமெரிக்காவின் Madison மாநிலத்தின் Postal Code 35672 ஆகும். Google இல் தேடச் சோம்பல் பட்டால் இதையே கூடக் கொடுத்துவிடலாம்.

இதன்பின்னர் Alternate Email என்று




படம் 3

கேட்கப்படும் பகுதிக்குள் உங்களிடம் வேறு ஏதேனும் மின்னஞ்சல் முகவரி இருந்தால் அதனைக் கொடுக்கலாம்.

இதற்கடுத்தாற்போல், Industry, Title, Specialization என்று கேட்கப்படும் பகுதிகளில் உங்களுக்குப் பொருத்தமானதைத் தெரிவுசெய்யுங்கள்.

இறுதியாக கீழே கட்டமிடப்பட்ட ஒரு பகுதிக்குள் கோணல்மாணலாக கொடுக்கப்பட்டிருக்கும் சில எழுத்துக்கள், மற்றும் இலக்கங்களைச் சரியாக இனங்கண்டு, தரப்பட்டிருக்கும் பகுதிக்குள் நிரப்புங்கள்.

இதற்கும் கீழே இருக்கும் Terms of Service என்ற பகுதியை விரும்பினால் படித்துவிட்டு, I agree என்று கொடுத்தால், உங்களுக்குரிய மின்னஞ்சல் முகவரி உடனே கிடைத்துவிடும்.

நீங்கள் படிவத்தை நிரப்புவதில் ஏதேனும் தவறுகள் விட்டிருந்தால், எந்தப் பகுதியில் தவறு இழைக்கப்




பட்டிருக்கிறது என்பதை அதுவே சுட்டிக்காட்டும். அதனைச் சரிப்படுத்திக்கொண்டு மீண்டும் அழுத்த காரியம் ஆகிவிடும்.


பிறகென்ன?. நீங்களும் ஒரு மின்னஞ்சல் முகவரிக்குச் சொந்தக்காராகி மின் தொடர்பாடல் உலகுக்குள் நுழைந்துவிட்டீர்கள். முதற்காரியமாக எமக்கே ஒரு மின்னஞ்சல் அனுப்பிச் சரிபார்த்துக்கொள்ளுங்களேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நன்றி:- கொம்பியூட்டர் ஃபோக்கஸ்.





## பிச்சைக்கார வர்க்கம்




நன்றி:- கொம்பியூட்டர் ஃபோக்கஸ்.




நன்றி:- கொம்பியூட்டர் ஃபோக்கஸ்.




நன்றி:- கொம்பியூட்டர் ஃபோக்கஸ்.

## "பதிப்புத் துறையின் பரிணாம வளர்ச்சி"



நன்றி:- Reader's Digest



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வாசகர் திருமுகம்

PC Times சஞ்சிகை நிறுவனத்தாருக்கு எனது அன்பான வாழ்த்துக்கள். இப்படியான ஒரு தொழில்நுட்ப சஞ்சிகை வெளிவருவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இவ்வாறு ஒரு தொழில்நுட்ப சஞ்சிகை இலங்கையில் வெளிவருவது அரிது. இந்தச் சஞ்சிகை பல சுவாரஸ்யமான அம்சங்களுடன் தொடர்ந்தும் இடைவிடாது வெளிவரவேண்டும் என்று நானும், எனது நண்பர்களும் ஆர்வத்துடன் எதிர்பார்க்கிறோம். மேலும் பல கணினி மென்பொருள், வன்பொருள் கட்டுரைகளும் இடம்பெற வேண்டும் என்று பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**M.B.A.மலிக்,**
**368 A, ஓட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர்-06**

PC TIMES சஞ்சிகை நிர்வாகத்தினர் அனைவருக்கும் எனது நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படியான ஒரு புதுமையான சஞ்சிகையை சுவையான பல அம்சங்களை உள்ளடக்கி வெளியிட்டதில் நானும் நண்பர்களும் பெருமகிழ்ச்சியடைகிறோம். பல சஞ்சிகைகள் இவ்வாறு வெளிவந்து இடையில் நின்றுபோய்விட்டன. அவ்வாறில்லாமல் PC TIMES தொடர்ந்து வெளிவரவேண்டும். கணினி தொடர்பான மேலும் பல விடயங்கள், Mobile Phone, Multimedia என பல விடயங்களையும் தொடர்ந்துவரும் சஞ்சிகை களில் தரவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்.

**A.H.அன்வருள் சதாத்,**
**205, காதியார் வீதி, ஏறாவூர்-06**

PC TIMES காலத்திற்கு ஏற்ற சஞ்சிகை. இளைஞர், யுவதிகளின் கைகளில் கட்டாயம் இருக்கவேண்டியது. Wijeya News Papers குழுவினருக்கு எமது பாராட்டுக்கள்.

"கணினி வாங்குமுன் கவனிக்கவேண்டியவை" பயனுள்ள விடயங்களை உள்ளடக்கியிருந்தது. Word, Exel, Windows, Coral Draw என்பனபற்றி விளக்கம் கொடுத்தால் பயனுள்ளதாக இருக்கும்.

**M.S.நஜர்கான்,**
**11/1, ரஹ்மானியா வீதி, கிண்ணியா-01**

விஜயா நியூஸ்பேப்பர் நிறுவனத்திற்கு எனது வாழ்த்துக்கள். உங்கள் புதிய மாதாந்த தகவல் தொழில்நுட்ப சஞ்சிகைபற்றி நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இதில் இலத்திரனியல் பற்றிய விடயங்களும் வந்தால் மிகவும் நன்றாக இருக்கும். சிங்களத்தில் அவ்வாறான சஞ்சிகை இருக்கிறது. தமிழ் மொழி மாணவர்களுக்கு அப்படி ஒன்று இருந்தால் நன்று. எனவே உங்கள் சஞ்சிகையில் இலத்திரனியல் தொடர்பான விடயங்களையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.

**M.M.உஸ்மான்**

சிறைப்பட்டுவிட்ட என் மனதுக்கு முன்னால்...!
பட்டொளி வீசும் பௌர்ணமி நிலவாய்
நல்ல நல்ல செய்திகளைச் சுமந்து வந்தது PC Times
திறந்து பார்த்தேன்...!
என் மனதுக்கு விடுதலை கிடைத்தது..!!!

**அ.லோரன்ஸ்- லுணுகலை**

ஆசிரியருக்கு,
தங்களது இதழில் முக்கியமான Software களின் Shortcut Keys ஐ வெளியிடுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

**சதீஸ்**

PC Times இல் வரும் அனைத்து விடயங்களும் நன்று. 'சுடு ஜோக்ஸ்' என்னை மிகவும் கவர்ந்துவிட்டது. மேலும் விருத்தியடைய எனது வாழ்த்துக்கள்.

**J.M.சவ்ரன்,**
**10B2, மதீன் தேசிய பாடசாலை,**
**சியம்பலகஸ்கொட்டுவ.**

---

தமிழ் PCTIMES தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

### ஆசிரியர் குறிப்பு

கடிதங்களையும், வாழ்த்துக்களையும் அனுப்பிவைத்த அனைத்து வாசகர்களுக்கும் நன்றி. யாழ்ப்பாணத்திலிருந்து தங்கராஜா தவரூபன், கொழும்பிலிருந்து பிரதீப் மற்றும் எங்கிருந்தோ அனூஃப், எனப் பலரும் மின்னஞ்சல் மூலம் தொடர்புகொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், ஆக்கங்களை அனுப்பிவைப்பதாகவும் கூறியிருந்தார்கள். சிலர் இந்த இதழிலிலேயே வாசகர்களைச் சந்திக்கிறார்கள். ஏனையோரும் இவ்வாறு உங்களுக்குத் தெரிந்த விடயங்களை மற்றையவர்களுடன் பகிர்ந்துகொண்டு அறிவை விரிவாக்கலாம்.

உங்கள் எதிர்பார்ப்புக்களை இந்த இதழிலேயே ஓரளவு பூர்த்திசெய்திருக்கிறோம் என்று நம்புகிறேன். அடுத்துவரும் இதழ்களில் மேலும் வளர்வோம். தொடர்ந்து எழுதுங்கள். Keep in Touch.

**-ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தாதாரர் ஆகுங்கள்

வளர்ந்துவரும் தகவல் தொழில்நுட்ப உலகில் நீங்கள் வாசிக்கத் தவறும் ஒவ்வொரு புத்தகமும் மீளப் பெறமுடியாத பெரும் இழப்பாகவே இருக்கும். எனவே, இன்று இலங்கையில் வெளியாகும் ஒரேயொரு மாதாந்த தமிழ் தகவல் தொழில்நுட்ப சஞ்சிகையான PC TIMES ஐ தவறாமல் நீங்கள் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்த எம்முடன் சந்தாதாரர்களாக இணைந்துகொள்ளுங்கள்.

இங்கே தரப்பட்டிருக்கும் படிவத்தையோ, அல்லது, இதேபோன்றதொரு மாதிரி விண்ணப்பப் படிவத்தையோ நிரப்பி, உரிய சந்தாப் பணத்துடன் கீழே தரப்பட்டிருக்கும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

சந்தாப் பணத்தை காசோலையாகவோ, காசுக்கட்டளையாகவோ அனுப்பலாம்.

காசோலைகள் "Wijeya Newspapers Ltd." என்ற பெயருக்கு எழுதப்படுவதுடன், காசுக்கட்டளைகளை "Slave Island" தபால் அலுவலகத்தில் மாற்றக்கூடியதாக அனுப்பிவையுங்கள்.

சந்தாக் கட்டண விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

"ஆம்! நான் PC TIMES இன் சந்தாதாரராக விரும்புகிறேன்"

பெயர்: _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

முகவரி: _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

தொ.பே.இல.: _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

மின்னஞ்சல்: _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

இத்துடன் ரூ _ _ _ வுக்குரிய காசோலை/காசுக்கட்டளை (இல. _ _ _ _ _ _ _ ) "Wijeya Newspapers Ltd." என்னும் பெயருக்கு அனுப்பிவைக்கிறேன்.

_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

கையொப்பம்




## உள்நாட்டு, வெளிநாட்டு சந்தாக் கட்டணங்கள்

| காலம் | கொழும்பு நகர எல்லைக்குள் | உள்ளூர் தபால் | "அ" வலயம் | "ஆ" வலயம் | "இ" வலயம் | "ஈ" வலயம் |
|---|---|---|---|---|---|---|
| ஒரு வருடம் | 360.00 | 408.00 | 900.00 | 1,104.00 | 1,212.00 | 1,548.00 |
| ஆறு மாதம் | 180.00 | 204.00 | 450.00 | 552.00 | 606.00 | 774.00 |

**"அ" வலயம் :-** ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான்

**"ஈ" வலயம்:-** கனடா, ஜீனியா, ஐக்கிய அமெரிக்கா, க்யூபா, பேர்முடா

**"ஆ" வலயம் :-** ஈடென், பா:ரேன், பேர்மா, ப்றூணி, டுபாய், ஹொங்கொங், டோஹா, இந்தோனேஷியா, ஈரான், ஈராக், குவைத், மலேசியா, ஓமான், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்னாம், லாவோஸ், ஜோர்தான், டமார், தெஹ்ரான், றியாத்

**"இ" வலயம்:-** ஓஸ்ரியா, அவுஸ்ரேலியா, பொட்ஸ்வானா, சீனா, சைப்ரஸ், டென்மார்க், எகிப்து, பிரான்ஸ், பூஜீ தீவு, கானா, கம்பியா, ஜேர்மனி, ஹோலன்ட், ஜப்பான், மலாவி, மதீரியா, மாலி, நியூசிலாந்து, நெதர்லாந்து, பப்புவா நியூ ஜீனியா, தென்னாபிரிக்கா, ஸ்வீடன், ஸ்பெய்ன், தெற்கு தாய்வான், ஐக்கிய இராச்சியம், சோவியத் ரஷ்யா, உகண்டா, சம்பியா, ரூமானியா, இத்தாலி, சிம்பாப்வே, பிலிப்பைன்ஸ்.

**WIJEYA NEWSPAPERS LTD**
No.08, Hunupitiya Cross Road, Colombo-02, Sri Lanka
Tel: 2307789, 2314714 Ext. 626, Fax: 2459725,
email: subs@wijeya.lk

**காசோலைகள்:**
WIJEYA NEWSPAPERS LTD. என்ற பெயருக்கு எழுதப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் PCTIMES
தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

# விளம்பரக் கட்டணங்கள்

| | முழுப்பக்கம் | 1/2பக்கம் | 1/4பக்கம் | 1/8பக்கம் |
|---|---|---|---|---|
| பின்னட்டை | 25,000.00 | - | - | - |
| பின் உள்ளட்டை (வர்ணம்) | 22,500.00 | - | - | - |
| முன் உள்ளட்டை | 20,000.00 | - | - | - |
| உள்பக்கம் (க/வெ) | 10,000.00 | 6,000.00 | 3,000.00 | 1,500.00 |
| உள்பக்கம் (க+1) | 12,500.00 | 6,500.00 | 3,500.00 | 1,750.00 |
| உள்பக்கம் (க+2) | 15,000.00 | 8,000.00 | 4,000.00 | 2,000.00 |
| உள்பக்கம் (வர்ணம்) | 17,500.00 | 9,000.00 | 4,500.00 | 2,500.00 |

wijeyanewspapers
helping shape opinions

**விளம்பரத் தொடர்புகளுக்கு:**
Advertising Manager
Wijeya Newspaper Ltd
48, Parkway Building, Park Road,
Colombo 2.

**கோட்டை கிளை:**
2D, Sir Chittampalam A Gardiner Mw,
Regent Building, Fort. Tel. 2386724

**கண்டி கிளை:**
1st Floor, Nabeesha Building,
Kotugodella Stret, Kandy. Tel.081 2228492

**இரத்தினபுரி கிளை:**
99 1/1, Bandaranayaka Mw, Ratnapura.
Tel:045 5440115

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org